மன்றம்

ஆசிரியர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

5 – 12 – 56

★

அணு 4

★



★

Best copy available.

அருமையும் எளிமையும்

★

அறிஞர் அண்ணா அவர்கள் எந்த அளவுக்கு அருமையும் பெருமையும் உடையவர்களோ, அந்த அளவுக்கு எளிமையும் இனிமையும் உடையவராவார்கள். மேடையேறிச் சொற்பொழிவாற்றும் சொல்லாற்றல், கட்டுரை-கதை-கவிதை-நாடகம் திரைக்கதை வசனம் எழுதும் எழுத்தாற்றல், நாடகங்களில் சில உறுப்புகள் ஏற்று நடிக்கும் நடிப்பாற்றல், அரசியலிலிருந்து அடுக்களை வரையிலுள்ள பல்வேறு பிரச்சினைகளையும் தெளிவாக அறிந்து அவற்றின் நுட்பங்களையெல்லாம் வரையறுத்துத் தெளிவு படுத்திக் காட்டும் ஆற்றல், நாட்டிற்கும் மக்களுக்கும் உகந்த திட்டங்கள் தீட்டிக் காட்டிடும் ஆற்றல், இயக்கத்திற்குத் தலைமை தாங்கி அதனைத் திறம்பட நடத்திச் செல்லும் ஆற்றல், நண்பர்களோடு மணிக்கணக்கில் நாட்கணக்கில் உட்கார்ந்து தொடர்ந்து இனிமையாக உரையாடும் ஆற்றல், உள்ளன்போடும் உயர் பண்போடும் பழகும் ஆற்றல், தலைவரோடு தலைவராய்த் தொண்டரோடு தொண்டராய் நண்பரோடு நண்பராய் நடந்து கொள்ளும் ஆற்றலும் ஆகிய இத்துணை ஆற்றல்களையும் ஒருங்கே பெற்ற அறிஞர் அண்ணா அவர்களுக்குத் தமிழகத்தில். ஏன் இந்தியத்துணைக் கண்டத்திலேயே ஈடு இணையுள்ளார் எவரும் இல்லை என்று தான் சொல்லவேண்டும்.

அறிஞர் அண்ணாஅவர்கள் பெற்றுள்ள ஆற்றல்களில் ஒன்றையோ அல்லது ஒரு சிலவற்றையோ அரைகுறையாகப் பெற்றிருந்தால் கூட, அகந்தையின் உச்சியிலே ஏறி நின்று குதியாட்டம் போடும் பலரை நாம் அன்றாடம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். சாதாரண கூழைமட்டை, பேயத்திக் கொம்பு, முருங்கை மிலாறு, தாழங்காய் போன்றவர்களெல்லாம் கூட அரை குறைத் திறமையும் தகுதியும் பெற்றுவிட்ட உடனே தலைதுள்ளிக் குதிப்பதைப் பார்க்கிறோம். பலரிடத்தில் ஆற்றல் வளர வளர அகந்தையும் வளரக் காண்கிறோம். ஆனால் அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் அறிவாற்றலும், பெருமையும், புகழும், சீரும், சிறப்பும், பொலிவும், வலிவும், ஆக்கமும், ஊக்கமும், தகுதியும், திறமையும், செம்மையும் செல்வாக்கும் வளர வளர, எளிமையும் இனிமையும் மேன்மேலும் வளர்ந்தோங்கும் அரியபண்பை அவரோடு நெருங்கிப் பழகுகிறவர்கள் தெளிவாக உணருவார்கள்.

சென்ற ஏழு ஆண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பரந்து, விரிந்து, வளர்ந்து, சிறந்து, ஓங்கு புகழ் எய்தி வந்திருக்கிறது என்றால்; அதற்குப் பெரும்பங்கு முழு முதற் காரணமாக இருந்து வருபவர் அறிஞர் அண்ணா அவர்களே ஆவார்கள். அறிஞர் அண்ணா அவர்களின் அறிவு, ஆற்றல், நேரம், நினைப்பு, உழைப்பு, பேச்சு, எழுத்து, நடிப்பு, நாடகம், திரைப்படம் ஆகியவற்றின் மூலம் கழகம் வளர்ந்து வந்துள்ள தன்மையைக் கூர்ந்து கவனிக்கும்போது, அவர் அளவுக்கோ, அல்லது அவர் அருகே அணுகுகிற அளவுக்கோ நம்மால் பணியாற்ற இயலுமா என்பதைத் தான் நல்லெண்ணம் கொண்ட ஒவ்வொருவரும் தமக்குத்தாமே சிந்தித்துப் பார்த்து வியந்து போவார்கள். இவ்வளவு அருமை பெருமைகளைப் படைத்த அண்ணா அவர்கள் மிகச் சாதாரணமானவரோடும் பழகுகிறார், மிகச் சாதாரணமானவர்களிடத்தில் காணப்படும் சிறிதளவு திறமையாக இருந்த போதிலும் அதனைப் பெரிதும் பாராட்டுகிறார், மிகச் சாதாரண உடைகளை உடுத்திக் கொள்கிறார், மிகச் சாதாரண வசதிகள் கிடைத்தாலும் திருப்தி கொள்கிறார், மிகச் சாதாரண உணவு உட்கொள்வதிலே அமைதி பெறுகிறார், அடக்கமே உருவாக அமையப் பெற்றிருக்கிறார் என்று அறியும்போது அழுக்காறற்ற உள்ளம் படைத்தவர்கள் அனைவரும் அறிஞர் அண்ணா அவர்களைப் போற்றிப் பாராட்டி வியப்புற்று நிற்கிறார்கள்.

அருமைக்கெல்லாம் அருமையாயும், எளிமைக்கெல்லாம் எளிமையாயும் விளங்கும் அறிஞர் அண்ணா அவர்களைச் சீரிய வழி காட்டியாகக் கொள்வதிலும் அவரது அரிய அறிவுரைகளைக் கேட்பதிலும், அவரது உயரிய திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதிலும் இலட்சக்கணக்கானவர் நாடெங்கிலும் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவேதான், அப்படிப்பட்ட அறிஞர் அண்ணாவைப் பெற்றிருப்பதிலே திராவிட முன்னேற்றக் கழகம் என்றென்றும் பூரிப்பும் பெருமையும் கொள்கிறது!

மன்றம்
இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

மலர் 5 ☆ (15—12—56) ☆ இதழ் 16

அம்பேத்கார் மறைவு !

டாக்டர் அம்பேத்கார் மறைந்தார் என்ற செய்தி மிகத் திடுக்கிடத்தக்க விதத்தில் வந்தது. அவரைத் தலைவராகப் பெற்ற தாழ்த்தப்பட்டோர் சமூகமும், நல்லறிவாளனைப் பெற்ற இந்திய உபகண்டமும் மீளாத் துயரில் ஆழ்ந்துள்ளன.

உறங்கிக் கிடந்த சமூகத்தை விழிப்படையச் செய்ய டாக்டர் அம்பேத்கார் பாடுபட்டார்; அத்தகைய செயல்வீரர் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார். இரவு உறங்கக் கண்மூடியவர், காலையில் கண் விழிக்கவில்லை.

நூற்றாண்டுகளாக அநீதியால் வதைக்கப்பட்ட சமூகத்தின் நீதிக்காகப் போராடிய மாவீரன் இறந்துபட்டான். கண்ணீர் சிந்திய கண்களுடன கோடிக்கணக்கான மக்கள் உள்ளனர், இறந்த மாவீரனை நினைத்து, மறைந்த மாணிக்கத்தை நினைத்து!

இருண்ட கடலாழத்தில் தோன்றிடும் ஒளிமுத்தைப்போல, அறியாமையில் ஆழ்ந்து கிடந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இருள் கிழித்து வெளிவந்த ஒளிவிளக்கு டாக்டர் அம்பேத்கார்! தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் தமது தலைவனின் அறிவாற்றல் கண்டு மகிழ்ந்தனர். பெருமிதம் அடைந்தனர். சமூகத்தின் மேட்டுப் பகுதியில் அமர்ந்து, வேதகாலத்திலிருந்து இந்நாள்வரை கல்வித்துறையை தமக்கே உரித்தானதாக்கிக் கொண்ட உயர்சாதி வகுப்பினரும் கண்டு வியக்குமளவுக்கு-பார்க்கப்போனால் மருளுமளவுக்கு டாக்டர் அம்பேத்காரின் அறிவாற்றல் வளர்ந்திருந்தது. பொருளாதாரம், சட்ட நுணுக்கம், அரசியல் அறிவு இவற்றில் சிறந்த புலமைபெற்று டாக்டர் அம்பேத்கார் விளங்கினார். அவர் எழுதிய நூல்கள் இந்திய அரசியலில் அளவுகோல்களாயின. டாக்டர் அம்பேத்கார் எழுதிய "பாகிஸ்தான்" என்ற நூலை தமக்கு முன்னே வைத்துக்கொண்டுதான் காந்தியும் ஜின்னாவும் பிரிவினைப் பிரச்சினை பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். பாகிஸ்தானம் என்று புதியநாடு உருவாவதற்கு டாக்டர் அம்பேத்கார் எழுதிய நூல்தான் ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. பின்பு இந்தியாவின் அரசியல் சட்டம் எழுதப்படுவதற்கு டாக்டர் அம்பேத்காரின் அரசியல் சட்ட அறிவு தேவைப்பட்டது. மனு மாந்தாதா பரம்பரையில் வந்தோர் பல்லாயிரவர், சட்டம் பல படித்துப் பட்டம் பல பெற்றிருந்த போதிலும் தாழ்த்தப்பட்டவர்களின் மத்தியில் சட்டம் படித்த ஒருவர் - ஒரே ஒருவர் - அவர் அழைக்கப்படவேண்டியதாயிற்று. அதுமட்டுமல்ல, மனு மாந்தாதா வழிவந்தவர்கள், டாக்டர் அம்பேத்காரைப் பார்த்து "கலியுக மனு" என்று போற்றவும் வேண்டியிருந்தது. அந்த அளவு டாக்டர் அம்பேத்காரின் அறிவு வளர்ந்திருந்தது.



பட்டமும் பதவியும் பேரும் புகழும் வந்தடைந்த போதிலும், அம்பேத்கார் தாம் கொண்ட நோக்கத்தையோ, தாம் பிறந்த சமூகத்தையோ மறந்ததில்லை. பதவி தருவதன் மூலமும் புகழுரைகள் வழங்குவதன்மூலமும், அம்பேத்காரின் புலமையைப் பயன்படுத்திக் கொள்வதுடன், அவருடைய தொல்லையைத் தவிர்க்கலாம் என உயர்சாதிக்காரர்கள் நினைத்தனர். வட்ட மேஜை மாநாட்டின்போதும், தேர்தல் தொகுதி வரையறுப்பின்போதும், அம்பேத்காருடன் நயந்து பேசி "விலைக்குப்" பெற்றுவிட முயன்ற மேல்சாதி தேசிய வாதிகள் இருந்தனர். தனது சமூகத்திற்குத் துரோகம் செய்ய நினைத்திருந்தால், சொந்த

வாழ்வு உயர்ந்திருப்பதுடன் கடைசியாக இருந்ததைவிட மிகப் பெரிய "தேசத்தலைவராக" பத்திரிக்கைகளால் வாழ்த்தப்பட்டிருப்பார்! தனது சமூகத்தின் உரிமைகள் பாதிக்கப்பட்டபொழுது, அம்பேத்கார் அடங்கிப் போவதில்லை. பதவி, புகழ் எல்லாவற்றையும் உதறித்தள்ளி, ஆவேசத்துடன் போராடக் கிளம்பிவிடுவார். அவரை அதுவரைப் போற்றிக்கொண்டிருந்தவர்கள் கூட, "எவ்வளவு கடுஞ்சொற்கள்! இவ்வளவு காலம் ஒன்றாக இருந்ததையும் மறந்து கோபிக்கிறாரே!" என்று அம்பேத்காரைத் தூற்றுவதுண்டு. அம்பேத்கார் தனது சமூக உரிமையைப்பற்றிப்பேச ஆரம்பித்துவிட்டால் அடக்கமாக இருந்த எரிமலை வெடித்துக் கிளம்புவதைப் போலத்தான்! உரிமைப் போராட்டத்தில் அவர் எள்ளளவும் விட்டுக் கொடுத்ததில்லை. இந்து மதத்தின் கொடுமையைத் தனி ஒருவராக எதிர்த்து நின்று அவர் போராடினார். போராட்டத்தின் மத்தியில் அவர் தொடுத்த போராட்டம் வெற்றியாகும் என்பதற்கான அறிகுறிகள் ஆரம்பமாகும் நிலையில் மறைந்து விட்டார்.

தாழ்த்தப்பட்டோருக்குக் காங்கிரசுக் கட்சியால் நன்மை ஏதும் விளையாது என்பதை ஆரம்பமுதல் கண்டு, போராடிவந்தவர் அம்பேத்கார்! "தாழ்த்தப்பட்டவர்களுக்குக் காங்கிரஸ் செய்தது என்ன?" என்ற தலைப்பில் காங்கிரஸ் ஏமாற்று வித்தையை அம்பலப் படுத்தி அம்பேத்கார் ஒரு நூல் எழுதினார். விடுதலை பெற்ற இந்தியாவில், சட்டமந்திரியாக அவர் அழைக்கப்பட்ட பொழுது, சட்டத்திருத்தத்தின் மூலம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நன்மை புரியலாம் என்ற நம்பிக்கை மீது அவர் நேரு அரசாங்கத்தில் பங்கு கொண்டு, இந்து மதத்திருத்தச் சட்டமொன்றைத் தயாரித்தார். அச்சட்டம் நிறைவேறி விட்டால், சாதி வெறி ஒழிந்து சகலருக்கும் சமநீதி கிடைக்குமென்று அம்பேத்கார் நம்பினார், பாடுபட்டார். ஆனால் சட்ட மந்திரியான அவர் கொண்டு வந்த சட்டம் காலதாமதப் படுத்தப்பட்டது, ஒத்திப் போடப்பட்டது. கடைசியாகக் கைவிடப்பட்டது. சட்டம் நிறைவேறவில்லை, எதிர்க்கட்சியின் எதிர்ப்பால் அல்ல மந்திரிசபை ஆதரவு காட்டாததால், நேருபண்டிதர் ஆதரிக்க முன் வராததால்! காங்கிரசுத் தலைவர்களின் துரோகத்தைக் கண்டு, வெகுண்ட அம்பேத்கார் தனது பதவியை இராஜினாமா செய்தார். இந்தியப் பாராளுமன்றத்தில் அப்பொழுது தலைமை வகித்த அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள் இராஜினாமாவுக்காரணங்களைச் சொல்ல அம்பேத்கார் வந்தபொழுது அனுமதிக்கவில்லை. பாராளுமன்றத்தை விட்டு வெளியேறி மக்களிடம் தனது அறிக்கையைத் தந்தார் அம்பேத்கார்! நேரு அரசாங்கத்தின் பிற்போக்கு நிலையும், பாராளுமன்றத் தலைவரின் தவறான-ஜனநாயகத்துக்கு முரணான போக்கும் கண்டு, வெளியுலகு அதிர்ச்சியடைந்தது! அம்பேத்காரின் கோபம் - அநீதி இழைக்கப் படுவதைக் காணும்பொழுது நேர்மையாளனுக்கு உண்டாகிற கோபம்-கடைசிவரைத் தணியவில்லை. அரசாங்கமும், இந்துசமூகமும் இழைத்துவந்த அநீதிகளை சமயம் கிடைத்தபொழுதெல்லாம் சுட்டிக்காட்டினார். தணியாத அந்தக் கோபம்-தணியாத அந்த உரிமை ஆர்வம், அவர் மூச்சுடன் கடைசியாகத் தணிந்து விட்டது!

அம்பேத்கார் இறந்துவிட்டார்! சாதி வெறியையும், சனாதனச் செருக்கையும் எதிர்த்துப் போராடிய சிங்கம் இறந்துவிட்டது!

தாழ்ந்துகிடந்த சமூகத்தில் உரிமைக் குரல் எழுப்பிய உத்தமர் மறைந்துவிட்டார்! மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசும் காடு மணக்க வந்த கற்பூரப்பெட்டகம், இன்று மண்ணில் மறைந்துவிட்டது! பிறப்பால், குலத்தால் பேதங்கண்ட நாட்டில் அன்பால், அறநெறியால் எல்லோரையும் ஒன்றுபடுத்தலாம், உரிமையுடன் வாழச் செய்யலாம் என்ற நம்பிக்கையில் அன்பு மார்க்கத்தில் சேர்ந்து, புத்தரின் பொன்மொழிகளை நாடெங்கும் அவர் பரப்ப இருந்த நேரத்தில், நன்காடடைய நேரிட்டு விட்டது! புன்னகை பொதிந்த முகம் மறைந்து விட்டது! அன்பு கனியும் மொழி நின்றுவிட்டது!

சட்ட அறிஞர், அரசியல்ஞானி, இலக்கிய மேதை, உரிமைவீரர்—டாக்டர் அம்பேத்கார் இறந்துவிட்டார்! தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்கு மட்டுமன்றி, இந்திய உபகண்டத்தில் தாழ்ந்து கிடக்கும் எவருக்கும், அம்பேத்காரின் பிரிவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்! அவர் மறைந்துவிட்டார்; ஆனால் அவர் எழுப்பிய உரிமைக்குரல் மறையவில்லை, சாதிவெறி மீதும், சனாதன ஆதிக்கத்தின்மீதும் அவர் தொடுத்த போராட்டம் அடங்கவில்லை! உரிமைக் குரல் ஓங்கும்பொழுது, போராட்டம் வெற்றி பெறும்பொழுது, பிறப்பால் சூழும் பேதங்கள் நீங்கி சிறப்பால் மகிழும் சமுதாயம் உருவாகும்பொழுது, அறியாமை இருள் நீங்கி அறிவொளி பரவும்பொழுது, மதோன்மத்தர்கள் வீழ்ந்து மனிதாபிமானம் வெற்றி பெறும்பொழுது அம்பேத்கார் வெற்றி பெறுகிறார்! அதுவரை "அம்பேத்கார்" போராடுகிறார், சாகாத தலைமுறையில் ஒருவராக அவர் ஆகிவிட்டார்!

பனைக்காடும், பனைமேடும்

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், வடநாட்டில் உருவாக்கப்படும் திட்டங்கள் மிகப்பெரியவைகளாகவும், தென்னாட்டுக்குத் தரப்படுபவை மிகச் சிறியவைகளாகவும் இருக்கின்றன. வடநாட்டுத்திட்டங்கள் ஐம்பதுகோடி ரூபாய் நூறு கோடி ரூபாய் என்று வளரும் பொழுது, தென்னாட்டில் ஆயிரம் அல்லது லட்சம் என்று பேசக்கூடிய விதத்தில் திட்டங்கள் பேசப்படுகின்றன. ஐந்தாண்டுத்திட்டங்களின்கீழ் வடக்குத்தொழில் மயமாகவும் தென்னாடு தொழில் வளமற்ற குப்பைக் காடாகவும் ஆக்கப்படுவதை அடிக்கடிச் சுட்டிக் காட்டியுள்ளோம்!

பெரும் திட்டங்கள் திட்டப் பணம் இல்லை என்று தென்னாட்டைப் பொறுத்தவரையில் மாநில மந்திரிகளும் மத்திய அரசாங்கமும் சொல்லி விடுகிறார்கள். ஆனால் வடநாட்டுத் திட்டங்களை நடத்த, எப்பாடுபட்டேனும் டில்லி அரசாங்கம் பணம் சேர்த்துவிடுகிறது. கடன் வாங்கியோ, வரிவிதித்தோ, வடநாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. உதாரணமாக, ஐந்தாண்டுத்திட்டங்களை நிறைவேற்ற உலகப் பாங்கியிடம் இந்திய அரசாங்கம் கடன் கேட்டிருந்தது. உலகப் பாங்கி கடன் கொடுக்க முன் வந்துள்ளதாக அண்மையில் நவம்பர் 30ந் தேதி பத்திரிக்கையில் வந்த செய்தியிலிருந்து தெரிகிறது. “இந்திய இரும்பு உருக்குச் சாலை” என்ற வடநாட்டிலுள்ள ஒரு இரும்புத்தொழிற்சாலைக்கு மட்டும் உலகப் பாங்கியிடமிருந்து கிடைத்துள்ள உதவி 9 கோடி 50 லட்சம் ரூபாயாகும். அந்தக் கம்பனிக்கு இது இரண்டாவது தடவையாகத் தரப்படுவதாகும். முதல் தடவை 15 கோடி ரூபாய் உதவப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தின் உதவியால், வடநாட்டு இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஒன்றுக்குமட்டும் உலகப் பாங்கிடம் கிடைத்த மூலதன உதவி 24 கோடி 50 லட்சமாகிறது. இதையல்லாமல் உள்நாட்டிலும், மத்திய அரசாங்கத்திலும் அந்தக் கம்பனி பெறுகிற பணம் இருக்கும். வெளியிலிருந்து உதவி வாங்கித் தந்தாவது, வடநாட்டில் தொழிற்சாலைகள் வளர்க்கப்படுகின்றன.

வடநாட்டில் 10 கோடி, 25 கோடி என்று தொழிற்சாலைகள் வளர்கின்ற செய்திகள் வருகின்றனவே, அதேபோல் தென்னாட்டில் தொழில்வளர மத்திய அரசாங்கம் பாடுபடுகிறதா என்று பத்திரிக்கையைப் பார்த்தால், -நவம்பர் 30ந்தேதி பத்திரிக்கையில் - கீழ்க்கண்ட செய்தி தென்னாட்டுத் திட்டமொன்றைப்பற்றி கூறுகிறது.

“பிரம்பு, மூங்கில் இவற்றுடன் பனை நார்களைக் கொண்டு கட்டில்கள், மற்றும் தட்டுமுட்டுச் சாமான்களைச் செய்யும் நிலையமொன்றை திருநெல்வேலி மாவட்டம் நாசரத்தில்நிறுவ அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. பனை மரச் செல்வத்தைப் பயன் படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு மூலதனச் செலவு ரூ 9,500.”

வட நாட்டில் 50 கோடி, 100 கோடியென்று தொழிற்சாலைக்கு மூலதனம் போடும்பொழுது, தென்னாட்டில் 9 ஆயிரத்தில் ஒரு திட்டம் தரப்படுகிறது. வடநாட்டில் இரயில்வே என்ஜின்கள், பெரும் இயந்திரங்கள், ஆலைகள் பாலங்கள் கட்டுவதற்கான பெரும் இரும்பு வார்ப்படங்கள் உருக்குச் சாமான்கள், எல்லாம் உருவாக்கப்படுகின்றன. தென்னாட்டில், பிரம்பு கட்டிலும், தட்டுமுட்டுச் சாமான்களும் செய்யப்படும் தொழிற்சாலை வருகிறது!

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல, “பனைமரச் செல்வத்தைப் பயன் படுத்துவது தான் இந்தத் திட்டத்தின் நோக்கம்’ என்று நாசரத் பனை மரத்திட்டத்தைப் பற்றி அரசாங்கம் நமக்குக் கூறுகிறது. பனை மரத்தை விட வேறு செல்வங்கள் தென்னாட்டில் கிடைக்கவில்லையா? பனை மரம் ஒன்றுமட்டும் வளரும் பாலைவனமாகவா தென்னாடு இருக்கிறது? சேலத்தில் கிடைக்கும் இரும்பு, தென்னார்காட்டில் புதைந்து கிடக்கும் கருப்புத் தங்கம், எண்ணெய், மற்றும் மண்ணிலே மறைந்து கிடக்கும் அலுமினியம் மைகா, தங்கம், தோரியம், உரேனியம், ஏராளம்! அவைகளை எடுத்து நாட்டை வளப்படுத்த ஆற்றலற்ற அரசாங்கம், பனைமரச் செல்வத்தைப் பயன் படுத்தப் போகிறதாம்! பனைமரம் கூடப் பக்கத்தில் வரும் மந்திரியைப் பார்த்துச் சிரிக்குமே “நான் தான் மரமாக—எதையும் எடுத்துச் சொல்லமுடியாத பனைமரமாக நிற்கிறேனென்றால், நீங்களுமாக மரமாக ஆகிவிட்டீர்கள்!

என் உச்சியிலிருக்கும் மட்டையை வெட்டுவதற்குப்பதில், என் அடியிலிருக்கும் மண்ணைக் கிளறிப்பார்த்தால் நிலக்கரியும் இரும்பும், பொன்னும், அலுமினியமும் ஏராளமாகக் கிடைக்குமே!'' என்று!

நாசரத் பனைமரச் செல்வத்தைப் பயன்படுத்தும் திட்டத்தை வெளியிட்டபத்திரிக்கை, அந்தச் செய்திக்குக் கீழே மற்றொரு திட்டம் வளரப் போவதையும் தெரிவித்திருக்கிறது. நாசரத் திட்டம் பனை மட்டையை மட்டும் நம்பியிருப்பது, இந்தத்திட்டம் பனை மரத்துடன், தென்னைமரத்தையும் சேர்த்துக்கொள்கிறது.

"பனை, தென்னை ஓலையில் பல பொருள்கள் செய்யும் தொழிலை மேன்மைப் படுத்துவதற்கும், அப்பொருள்களை ஏராளமாக வெளிநாடுகளுக்கு அனுப்பவும் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி சேலம் மாவட்டத்தில் மாதூரிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பள்ளப்பட்டியிலும் பயிற்சித்தொழில் நிலையங்கள் நிறுவப்படும். ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு நிலையத்தில் 20 பேருக்கு பயிற்சி அளிக்கப்படும்.''

எப்படிப்பட்ட அருமையான திட்டங்கள் பார்த்தீர்களா? பனை ஓலையிலும் ஏராளமாக விசிறிகள், கூடைகள் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பலாமாம்! சேலத்தில் "பாக்சைட்'' என்ற அலுமினியப் பொருளும் இரும்புக்கனிகளும் இருக்கின்றன. அவை எடுக்கத் திட்டம் போடாமல், தென்னை ஓலை விசிறிகள் செய்ய அரசாங்கம் திட்டமிடுகிறது!

நாசரத் திட்டத்துக்கு மூலதனம் ரூ 9,500 இரண்டவதான மாதூர்-பள்ளப்பட்டித் திட்டத்துக்கு மூலதனம் ரூ. 2500. இவற்றையல்லாமல், ஆண்டுதோறும் இரண்டுக்குமாக முறையே 51-ஆயிரம் ரூபாயும் 31-ஆயிரம் ரூபாயும் அரசாங்கத்துக்கு செலவாகக் கூடுமாம். இருந்தபோதிலும் இந்த இரண்டு "பனைமரத்'' திட்டங்களுக்குப் போடப்படும் மூலதனம் ரூ 9500ம், ரூ 2500ம்!

ஐந்தாண்டுத்திட்டத்தில், வடக்கில் பெரும் ஆலைகளும், தொழிற்சாலைகளும் உருவாகின்றன, தெற்கில் அப்பளத் தொழிற்சாலையும், பனை இலைத் தொழிலும்தான் வளர்க்கப்படுகின்றன.

வடக்கு தொழில்வளத்தில் வளர்கிறது. தெற்கு தட்டுமுட்டுச் சாமான்கள் செய்வதுடன் நின்றுவிடுகிறது!

வடக்கு வளர்கிறது, தெற்கு தேய்கிறது!

ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் தென்னாட்டுக்குச் செய்யப்படும் துரோகம் எவருக்கும்-ஏக இந்தியா பேசிக்கொண்டிருந்த தோழர்கள் உட்பட அனைவருக்கும்-வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் தன்மையை விளக்க வைக்கும் என்று நினைக்கிறோம். இந்தியா அனைத்தும் ஒன்றுதான் என்ற மனப்போக்கு மத்திய அரசாங்கத்துக்கு இருப்பது உண்மையானால், வடநாட்டில் இரும்பு இருக்கும் இடங்களில் கோடிக்கணக்கில் முதல் போட உதவும் பொழுது, இரும்பு கிடைக்கக்கூடிய சேலம் போன்ற தென்னாட்டு இடங்களில் தென்னை ஓலை, பனைஓலை திட்டங்களைத் தருவதென்றால் அதற்கு என்ன பொருள்?

தென்னாடு பனைமரக்" காடாகத்தான் இருக்கவேண்டும். வடநாடு பல்தொழில் வளமும் பெற்ற பணமேடாக ஆகட்டும் என்றுதானே அரசாங்கம் திட்டமிடுகிறது.

> கூடைமுறம் கட்டுவோம்
> குறி சொல்லுவோம் நல்ல
> கோலமான பச்சையெல்லாம் குத்திடுவோம்.''

என்று தென்னாடு பாடிக்கொண்டிருக்கவேண்டும். அதேசமயம்,

> "ஆடைவகைகள் குவித்திடுவோம் பெரும்
> ஆலை அணைகள் கட்டிடுவோம்
> கோலமாக வாழ்ந்திடுவோம் பணம்
> எங்களிடம் கோடி கோடி''

என்று வடநாடு பாடிக்கொண்டிருக்கும்.

திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தில் பெரும்பணி ஆற்றியவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தோழர்களில் ஒருவரும், கடலூரில் வழக்கறிஞராகப் பணியாற்றி வருபவருமான தோழர் இளம்வழுதி அவர்களின் துணைவியார் திருமதி விசாலாட்சி அவர்கள், கடந்த சிலநாட்களாக மகப்பேருக்குப் பின்னர் நோய்வாய்ப்பட்டிருந்து, திடீரென மரணமடைந்தார் என்ற செய்தியறிந்து கலங்கினோம்.

கழகப்பணியில் ஈடுபட்டு ஆர்வத்துடன் அவர் வேலைசெய்துவரும்பொழுது, வீட்டின் குலவிளக்கு அணைந்து விட்டது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். வேதனையிருளில் சிக்கித் துயருறும் தோழர் இளம் வழுதி அவர்கட்கும், அவரது குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

★ காமராசரின் யோசனை ★

" தாய் மொழிப் பற்று அதிகரித்து வருகிறது. தாய்மொழியை நன்ருகக் கற்று, அழகாகப் பேச வேண்டுமென்ற ஆசை வாலிபரிடையே வளர்ந்து வருகிறது. தமிழ் மொழியின் எதிர்காலம் மகோன்னதமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனல் இந்த உற்சாகத்தை நல்லபடி மொழி வளர்ச்சிக்கே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' இவ்வாருக நமது மாநில முதலமைச்சர் காமராசர், சென்னை தொழிற் கல்லூரி மாணவர் தமிழ் மன்றத்தில் துவக்க விழாவில் பேசியுள்ளார்.

தமிழ் நாட்டில் தாய் மொழிப் பற்று இருப்பதைக் கண்டு காமராசர் கண்டு கொண்டதற்கு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிருேம். சென்னை மாநிலத்திலிருந்து மற்ற மொழியினர் வாழும் இடங்கள் பிரிந்து சென்ற பின்னரும் எஞ்சியிருந்த தமிழ்ப் பகுதிக்கு "தமிழ் நாடு'' என்று பெயர் வைத்தால் பேராபத்து நேர்ந்து விடுமோ என்று காமராசர் அஞ்சி, தமிழ் நாடு என்ற பெயரை வைக்காமல் சென்னை மாநிலம் என்ற பெயரைத் தொடர்ந்து தாங்க வேண்டும் என்ருர். தமிழ் நாடு என்று பெயரிட வேண்டுமென்று கோரி, பிப்ரவரி 20ந் தேதி தமிழகம் பூராவும் அர்த்தால் மூலம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டது. காமராசர் கவனித்தாரில்லை. " தமிழ் நாடு ' என்ற பெயர் கோரி, உத்தமர் சங்கரலிங்கனர் உண்ணுவிரதம் இருந்தார் ; நாட்கள் கடந்தன, உடல் மெலிந்தது, உயிர் ஊசலாடியது. தமிழ் நாடு கலங்கியது. முதலமைச்சர் காமராசர் கலங்காது இருந்தார்.

தமிழ் நாட்டில் பிறந்தவர், தமிழ் மொழியில் பேசுபவர், தமிழ் நாட்டு முதலமைச்சராக இருப்பவர், "பச்சைத் தமிழர்'' என்று பாராட்டப்படுபவர்,—அத்தகையவர் " தமிழ் நாடு'' என்ற பெயரை ஏற்க மறுக்கிருரே, " தாய் மொழிப்பற்று அற்றவரோ !'' என்று நாம் நினைத்ததுண்டு. சென்னைத் தொழிற் கல்வி மாணவர் தமிழ் மன்றத்தில் அவர் பேசியதிலிருந்து, தமிழ் மொழிப் பற்றை அவர் ஆதரிக்கிருர் என்று தெரிகிறது. ஆக " தமிழ் நாடு'' என்ற பெயரை அவர் ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணம், தமிழ் மொழிப்பற்று, தமிழ் நாட்டுப் பற்று இல்லாததால் அல்ல ; வேறு ஏதோ நெருக்கடி — சங்கடங்கள்— ஆபத்து — அச்சம் அவருக்கு உண்டாகியிருந்திருக்கிறது. மாணவர் மன்றத்தில் பேசிய உற்சாகத்துடன், மாநில மன்றத்தில் அவரால் பேச முடியவில்லை. பரிதாபமான நிலைதான் !

இப்பொழுதுள்ள பரிதாபமான நிலை நீடிக்காது என்று நினைக்கிருேம். காமராசர் அவர்களே " தமிழ் மொழியின் எதிர்காலம் மகோன்னதமா யிருக்கும்'' என்று கூறிவிட்டார். நிகழ்காலம் சோகமென்ருலும், எதிர்காலமாவது மகோன்னதமாயிருந்தால் நல்லது தானே !

வாலிபரிடை அழகான தமிழ் நடை வளர்ந்து வருவது குறித்து காமராசர் பாராட்டியுள்ளார். தமிழ் நாட்டில் அழகான, வளமான தமிழ் நடையை பேச்சிலும், எழுத்திலும் வளர்த்தவர் யார் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. இதுவரை " அழகான தமிழ் பேசி, வாலிபர்களை இவர்கள் மயக்கி வருகிருர்கள்'' என்ற குற்றச்சாட்டு இருந்து வந்தது. அதை மாற்றி, கனம் காமராசர் மாணவரிடையே தோன்றியபொழுது பாராட்டு அளித்துள்ளார்.

" தமிழ் மொழி வளர்ச்சியையும், அழகான தமிழில் இளைஞர்கள் பேசுவதையும் பாராட்டிய முதலமைச்சர் கடைசியாக ஒன்று கூறுகிருர் " இந்த உற்சாகத்தை நல்லபடி மொழி வளர்ச்சிக்கே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.''

வளர்ந்துள்ள உற்சாகத்தை "மொழி வளர்ச்சிக்கே பயன்படுத்த வேண்டு''மென்பது காமராசரின் கனிவான வேண்டுகோள் ! தமிழரின் உற்சாகம் அரசியலில் புகுந்து படாதபாடு படுத்துகிறது, பொருளாதார சமூகத் துறைகளில் பல கேள்விகளை எழுப்புகிறது. அவற்றை யெல்லாம் தம்மிடம் விட்டு விட்டு, உற்சாகத்தை யெல்லாம் " மொழி வளர்ச்சிக்கே'' பயன்படுத்த வேண்டுமென்று காமராசர் யோசனை தருகிருர் !

தொழிற் கல்லூரி மாணவர் தமிழ் மன்றத்தில் பேசியபொழுது கடைசியாக, "தமிழகத்திலுள்ள இதர மொழியினர் கலங்கத் தேவையில்லை'' எனக் காமராசர் அபயமளித்துள்ளார். வேடிக்கை யென்னவென்ருல், தமிழகத்தில் கலங்கி யிருப்பவர்கள் தமிழ் மொழியினர்தாம் ! அவர்களுக்கு யார் அபயம் தருவது ?

தென் இந்தியாவின் பிராகுவி பொறி எழுத்துக்களும் சங்ககாலமும்

(கே. கே. பிள்ளை)

இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பிராகுவி மொழியில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் இந்திய வரலாற்று மாணவர்களைத் தொடர்ந்து திகைப்படையச் செய்திருக்கிறது. இதற்கிடையில், 1945ஆம் ஆண்டு அரிக்காமேடு என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டவைகளுள் உற்சாகம் ஊட்டக்கூடிய பல பொருள்களுக்கிடையே இருபது மண் பாண்டத் துணுக்குகள் இருக்கின்றன. அவற்றில் பொறிக்கப் பட்டுள்ள எழுத்துக்கள குறில் எழுத்துக்களையுடையனவாயிருக்கின்றன. எழுத்து, மொழி இவற்றில் மேலே குறிப்பிட்ட பொறி எழுத்துக்களுக்கும், மதுரை, திருநெல்வேலி, மாவட்டங்களில் காணப்படும் ஐம்பது கல்வெட்டுக்களுக்கும் மிக நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. இப் பொறி எழுத்துக்களின் பொருள், அவை குறிக்கும் பொருள், எழுத்து, மொழி இவற்றைத் தீர்மானிப்பதற்குப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இக் கல்வெட்டுக்களில் எல்லாம் பயன்படுத்தப்பட்டிருக்கும் எழுத்து வடிவம் பிராகுவி மொழியைச் சார்ந்தது என்பது மறுக்க முடியாத ஒன்ருகும். பண்டை வரிவடிவாராய்ச்சித் துறையில் பிராகுவி மொழி கி. மு. மூன்ரும் நூற்ருண்டில் வழங்கியதாகக் கொள்ளப்படுகிறது. இவ்வெழுத்து வடிவு அதிக அளவில் பட்டிப்புரோலு பெட்டியில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள், புகழ் பெற்ற அசோகன் கல்வெட்டுக்கள், ஈழத்தின் முந்திய எழுத்துக்கள் இவற்றை ஒத்திருக்கின்றன. எனினும் குறிப்பிடத்தகுந்த சில வேற்றுமைகளும் உண்டு. உதாரணமாக 'தா' என்ற மெல்லெழுத்தைக் குறிக்கும் சின்னம் தென் இந்திய பிராகுவி பொறி எழுத்துக்களின் தனித்தன்மையைக் குறிக்கிறது. இங்கு விரிந்த அளவில் காணப்படும் 'ழ' என்ற எழுத்தைக்குறிக்கும் வடிவம் வட இந்தியக் கல் வெட்டுகளில் எங்குமே காணப்படவில்லை. தென் இந்தியாவில் எழுதப்பட்டிருக்கும் 'மா' என்ற சொல்லின் வடிவமும், அசோகன், பட்டிப்புரோலு முதலிய கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டிருக்கும் 'மா' என்ற வடிவத்திற்கும் அதிக வேறுபாடு உண்டு. இவ் வேறுபாடு, சில தொல்பொருளாராய்ச்சியாளர்களை அரிக்காமேடு பொறி எழுத்துக்களும் அதற்கும் தெற்கே காணப்படும் பொறி எழுத்துக்களும் திராவிட இனத்தைச் சார்ந்தவை என்றும்; அசோகன் கல் வெட்டுப் போன்றவைகளில் காணப்படும் வட இந்திய பிராகுவி மொழியினின்றும் இவை மாறுபட்டவை என்றும் எண்ணத்தூண்டுகிறது.*

பிராகுவி மொழியின் திராவிட வடிவம் வட்டெழுத்துக்களின் முந்தைய மொழி என்றும்; வட்டெழுத்து இன்றையத்தமிழ் எழுத்துக்களுக்கு முந்தியது என்றும் கூறுகிறார்கள். டாக்டர். பூகுலர் என்பவரால் முன் மொழியப்

---

* கி. மு. ஐந்தாவது நூற்றுண்டிற்கு முன்பு செமிடிக் இனத்தைச் சேர்ந்த பிராகுவி மொழியினின்றும் திராவிதி என்று ஒரு பகுதி பிரிந்து ஒரு சில தனித்தன்மையான முறைகளை வளர்த்துக் கொண்டது என்று டாக்டர். பூகுலர் குறிப்பிடுகிருர். ஆனல் எட்வர்ட் தாமஸ், கன்னிங்காம், டவுசன் போன்ற அறிஞர்கள் பிராகுவி மொழியே திராவிட மொழிகளின் மூலத்தினின்றும் பிறந்தது தான் எனறும், வட இந்தியாவில் வழக்கிலிருந்த மொழி இம் மூலத்தின் ஒரு பகுதிதான் என்றும் கூறுகின்றனர். வரிவடிவ மூலத்தினின்றும் பிராகுவி மொழி தோன்றியிருக்கவேண்டும் என்று கன்னிங்காம் கூறுகிருர். பேராசிரியர் லாங்டன் பிராகுவி மொழியில் மொகன்ஞ்சதாரோ-ஆரப்பா மொழிகளின் சாயல் தென்படுகிறது என்கிருர். இவருடைய கூற்றுக்கு டாக்டர் அண்டரின் கண்டுபிடிப்புகள் ஆக்கமளிக்கின்றன. இப்பொழுது தோன்றுவதுபோல் திராவிடர்களுக்கும் இந்து சமவெளி நாகரிகத்திற்கும் உள்ள தொடர்பை ஒப்பு நோக்கின் பிராகுவி மொழியின் மூலம் திராவிட மொழிதான் என்பது நம்பக்கூடிய தாகவும் உண்மையான தாகவும் இருக்கிறது.

பட்ட இந்தக்கருத்து டாக்டர். அரப்பிரசாத சாத்திரியால் மறுக்கப்படுகிறது. இவர் கூற்றுப்படி வட்டெழுத்து காரோசித்தி என்னும் மொழியினின்றும் வளர்ந்தது. ஆனால் பிராகுவி எழுத்துக்களைப் போலன்றி காரோசித்தி மொழி பல எழுத்துக்களுக்கு ஒரே வடிவத்தை உபயோகிக்கிறது, எழுத்துக்களில் கொக்கிகள் குறைவு, மேலும் இவைகள் வலமிருந்து இடமாக எழுதப்படுகின்றன. காரோசித்தி மொழியைவிட பிராகுவி மொழியுடன் வட்டெழுத்துக்களுக்கு பொதுவான அமைப்புகளில் ஒற்றுமை காணப்படுவதால் பிராகுவி மொழியினின்றும் வட்டெழுத்து தழுவப்பட்டது என்ற கருத்து உறுதி செய்யப்படுகிறது. தென் இந்தியாவில் கி. பி. 1000 வரையிலும் அதற்குப்பிறகும் அநேக நூற்றாண்டுகள் மலையாள நாட்டிலும் வட்டெழுத்து வழக்கிலிருந்தது.

தென் இந்தியப் பிராகுவி பொறி எழுத்துக்களின் மொழி பற்றிய கொள்கையில் வல்லுநர்களின் கருத்து மாறுபடுகிறது. இம் மொழியை அடையாளம் காணும் ஆராய்ச்சியில் எச். கிருட்டிண சாத்திரி கடினமாக உழைத்தார். தமிழ் மொழியினின்றும் பெறப்பட்ட எழுத்துக்களையும் அடையாளம் காணமுடியாத பல சொற்களையும் குறிப்பிட்டு, பிராகுவி பொறி எழுத்துக்களின் மொழி பிராகிருதம் கலந்த பண்டைத்தமிழ் மொழி என்ற கருத்தைத் தெரிவித்தார். எச். வி. சுப்பிரமணிய அய்யர் பொறி எழுத்துக்களின் மொழி பழந்தமிழ் மொழி என்று உறுதியாகக் கூறினார். தமிழ் எழுத்துக்களைப் பிராகுவி பொறி எழுத்துக்களுடன் ஒத்திட்டுப் பார்க்கும்பொழுது அடிக்கடி நம்பமுடியாதபடி அதிக ஊகம் செய்கிறார்.

மேற் கூறிய இருவர்களின் ஊகத்திலும் அதிக வேறுபாடு இருக்கிறது. உதாரணமாக, ஆனமலை பொறி எழுத்துக்களில் 'ஜ-' என்று சாத்திரியார்கொண்ட அதே எழுத்தை அய்யர் 'கு' எனக்கொண்டு பொருள் தருகிறார். திருப்பரங்குன்றம் கல் வெட்டுக்களில் 'ஜாம்' என்று சாத்திரி கொள்ளும் அதே எழுத்தை அய்யர் 'ழ' என்று கொள்கிறார். இவ்வாசிரியர்கள் சில சொற்களையும் வெவ்வேறு பொருள்படும்படி மொழி பெயர்க்கிறார்கள். இம்மொழி பெயர்ப்புகளில் ஒரு சில தவறானவை, ஏனையவை எந்த விதமான பொருளையும் கொடுப்பதில்லை.

மேலே குறிப்பிட்ட இரு கல்வெட்டாராய்ச்சியாளர்களின் முடிவைப் பெரும்பாலும் மறுத்து டாக்டர். சி. நாராயணராவ் தன் கருத்தைக்கூறி கல்வெட்டுக்களில் காணப்படும் மொழி பிராகிருதத்தின் பகுதியான பைசாகி மொழி என முடிவு செய்கிறார். ஒரேகாலத்தில் உள்ள பிராகுவி பொறிஎழுத்துக்கள் எல்லாம் பிராகிருதத்தில் இருக்கின்றன என வாதித்துப் பின் கல் வெட்டுக்களில் உள்ள எல்லா எழுத்துக்களுக்கும் பிராகிருதமூலம் கற்பிக்க முயற்சி செய்கிறார். உதாரணமாக, கொங்கர் புளித்தங்குளம், ஆரித்தாபட்டி, முருகால் தாழை,ஊந்தாங்கல், அழகர்மலைமுதலிய இடங்களில் உள்ள கல்வெட்டுகளில் காணப்படும், 'கொடுப்பித்தவன்', 'கொடுப்பித்தோன்', 'குடுப்பித்த', 'கொடுப்பித்தான்', 'குடுப்பித்தவன்' என்ற சொற்கள் 'கோட்டேதி' என்ற பாலி மொழியிலிருந்து பிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. வேறுபல எழுத்தாளர்கள் மேற்கண்ட சொற்கள் 'கொடு', 'குடு' என்ற தமிழ்சொற்களினின்றும் பிறந்தவைகள் எனக் கூறுகின்றனர். நரசிம்ம வர்ம பல்லவமல்லன் காலத்திய தமிழ் பொறி எழுத்துக்களில் மேற்சொன்ன தமிழ் சொல் அஃதே பொருளில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வெழுத்துக்கள் தமிழ் மூலத்திலிருந்து பிறந்தவைகள் என்பதுதான் சரி. 'நாடு' என்ற சொல் 'அலைந்துதிரி' எனப்பொருள் தரும் 'நாட்' என்ற வடமொழி (சமஸ்கிருதம்) மூலத்திலிருந்து பிறந்த சொல் என்ற டாக்டர் ராவின் வாதம் நம்பமுடியாத ஒன்றாகும். மேலும் 'உடையான்' என்ற சொல்லையொட்டி 'உடைய', குளம் எனப்பொருள்படும் 'ஏரி', 'தந்தை', 'மகன்', கிராமம் எனப் பொருள் தரும் 'ஊர்' முதலிய சொற்கள் எல்லாம் தமிழ் சொற்களே. 'வென்' என்ற சொல் "வேணுத" என்ற சொல்லினின்றும் பிறந்தது என்ற சுப்பிரமணிய அய்யரின் வாதம் வலியப் புனைந்து கூறுதலாகும். பொறி எழுத்துக்களில் அடிக்கடி காணப்படும் 'வென்' என்றசொல் 'தலைவன்' எனப் பொருள்தரும் 'வேள்' என்ற தமிழ் சொல்லினின்றும் பிறந்தது என்பது ஒப்புக்கொள்ளக்கூடியதொன்றாகும். மொத்தத்தில் டாக்டர் ராவின் வாதமும் அய்யரின் வாதத்தைப் போன்றே உறுதியானதல்ல. அதுமட்டுமல்ல, கி. மு. இரண்டு, மூன்று நூற்றாண்டுகளில் பாண்டி மண்டலத்தில் பைசாகி என்னும் மொழி பரவியிருந்தது என்ற வாதம் எப்படி உண்மைக்குப் புறம்பானதோ அதேபோன்று மிக்க அதிர்ச்சிதரக் கூடியதாகவும் இருக்கிறது.

இப்புனிதமான பொறி எழுத்துக்கள் தமிழ், பிராகிருதம் இரண்டும் சேர்ந்த கலப்பு இன மொழியாக இருக்கலாம் என்பதுதான்

இசை ரத்தினம் மறைந்தது

தலையங்கம் எழுதி முடிவுறும் நேரத்தில், "திருவாடுதுறை இராச ரத்தினம் இறந்து விட்டார்" என்ற செய்தி நெஞ்சைக் குலுக்கும் வகையில் வந்தது.

இசையுலகின் ஈடு இணையற்ற மன்னர் மன்னராக விளங்கியவர் இராசரத்தினம் அவர்கள்! பண்டைத் தமிழரின் இசைப் புலமையின் இருப்பிடமாக, அமிழ்தெனும் இசையை குழலின் மூலம் வார்த்து கேட்போரை மெய் மறக்கச் செய்து கொண்டிருந்த "இசை ரத்தினம்" நம்மிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது.

இசை மன்னர் இராசரத்தினம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாலும், அறிஞர் அண்ணாவிடத்தும் நீங்காத மதிப்பும், பற்றும் கொண்டிருந்தார். உடல் தளர்ந்திருந்த போதிலும், திருச்சியில் நடந்த மாநில மாநாட்டில் விடாப்பிடியாக வலிய வந்து, மிக உரிமையுடன், மிகுந்த அன்புடன், இராசரத்தினம் அவர்கள் குழலூதி மக்கட் பெருங் கடலை மகிழ்வித்த காட்சி, இன்னும் நமது மனக் கண்முன் நிற்கிறது!

இசையுலகத் தலைவரை, இனிய நண்பரை — நாம் இழந்து விட்டோம் வேதனையில் தவிக்கிறோம். அவரது குடும்பத்தாருடன் நாமும் சேர்ந்து ஆறுதல் பெறுவோமாக!

நேர்மையான யூகமாகத் தென்படுகிறது. இதற்கு முன் நாம் கூறிய சிலசொற்கள் தமிழ் சொற்கள் என்றால் 'பாலி', 'உபாச்சா' 'சேய்யா', 'லீனு' போன்ற பிற சொற்கள் பிராகிருத மொழியைச் சேர்ந்தவை. இந்தப் புதிருக்கு விளக்கம் தேடத்தேவையில்லை. புத்த மதத்தின் உயர்மொழியான பிராகிருதத் துடன் அதிகப்பற்றும் தொடர்புங்கொண்ட புத்த பிக்குகள் அந்தந்த வட்டத்திலுள்ள மக் கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் கல் வெட்டுக்களை நிறுவ முயற்சித்தனர். அதன் விளைவுதான் இருவேறு மொழிகளில் உள்ள சொற்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து நின்றன. தெளிவாகப் பிரிக்கப்படக் கூடியவைகளில் வினைச்சொல்லைச் சேர்ந்த உருபுகள் பண்டை வழக்கான தமிழ்மொழியில் இருக்கின்றன. ஆனால், பெரும்பாலும் குகைகளைக் கண்டு பிடித்தவர்களின் பெயர்களைமட்டும் குறித்து வைப்பதோடு மட்டும் இந்தப் பொறி எழுத் துக்கள் இருக்கின்றன என்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும்.

(தொடரும்)

✱

கிளியே! தூது போவாய்!

[இரா. நெடுஞ்செழியன்]

அவளோ, அழகெல்லாம் ஓருருவாகி உயிர் பற்று எழுந்து உலாவுவதுபோல் காட்சி ளிக்கிறாள். அவனோ ஆற்றலெல்லாம் ஒன்று ரண்ட வடிவழகனாகக் காட்சியளிக்கிறான்.

இருவரும் ஒருவரையொருவர் தினைப்புனத் தில் எதிர்ப்படுகிறார்கள்; இருவர் கண்களும் பசித்கொள்கின்றன; இருவரும் காதல் காள்கின்றனர்; மனம் விட்டுப் பேசுகின் னர்; அன்பைப் பரிமாறிக் கொள்கிறார்கள்.

இரவுக் காலங்களிலும், பகற் காலங்களி லும் யாரும் அறியாதவண்ணம், சிற்சில இடங் ளில் கண்டு அளவளாவுவது என்று முன் னேற்பாடு செய்து கொண்டு களவொழுக் த்தை இனிய முறையில் இன்பமாய் நடத்தி வருகின்றனர்.

தலைவன் வேற்றூர்க்காரனாக இருந்தபோதி லும் நாளதோறும குதிரை மீது கிளம்பி வந்து தன் அருமைக் காதலியைக் கண்டு விட்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறான். தலைவியும் தலைவனிடத்து அளவுகடந்த அன்பு கொண்டு தன் ஆருயிர்க்காதலனைப் போற்றிப் பாராட்டி மகிழ்ந்து வருகிறாள்.

நாள்தோறும் பகல் வேளையில் தலைவி தினைப்புனங் காக்கச் செல்லுவாள். தலைவன் அங்கு வருவான். இருவரும் ஓடியாடி விளை யாடியும், அருவியில் குளித்தும், அடவியில் திரிந்தும், பாட்டுப் பாடியும், ஆட்டம் ஆடியும் இன்பத்துறையில் இனிது இருப்பர். இப்படி யாகச் சில நாட்கள் ஓடுகின்றன.

விரைவில் பலரறிய திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற தன் விழைவைத், தலைவி, தலைவனிடம் தெரியப்படுத்துகிறாள். அது பற்றிக் கவனிக்கலாம் என்று தலைவன் அரைகுறையாக இசைவு அளித்துக் காலந் தாழ்த்திக்கொண்டு வருகிறான்.

இடைவிடாத வேலைத் தொல்லைகள் ஏற் பட்டதன் காரணமாகவோ, அல்லது சிறிது காலம் கழியட்டும் என்று எண்ணிய காரணத் தாலோ தலைவன் தலைவியைக் காண வரு வதை நிறுத்திக்கொள்கிறான்.

தலைவன் வராமை கண்டு தலைவி பெரிதும் வருந்துகிறாள். அவனைக் காணப் பெரிதும் ஏக்கங்கொள்கிறாள். அவனையே தன்மணாளனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதிலே பெரு விருப்பங் கொண்டு தவியாய்த் தவிக்கிறாள். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போயிற்றே என்று எண்ணித் துயருறுகிறாள். தன் அருமைக் காதலனை எப்படியேனும் மீண் டும் அடையவேண்டும் என்று கருதி அதற் கான வழிகளையெல்லாம் பற்றிச் சிந்திக்கிறாள்.

முன்பெல்லாம் தினைப்புனங்காக்க மகிழ்ச்சி யோடு ஓடோடியும் வந்து, மகிழ்ச்சியோடு திரும்பும் பழக்கத்தைக் கொண்டிருந்த தலைவி யின் நடையுடை நடிப்புக்களில், இப்பொழுது ஒருவித வாட்டமும், சோர்வும், தளர்ச்சியும் காணப்படுகின்றன. யாரிடத்தில் தன் மன வருத்தத்தைத் தெரிவித்து ஆறுதல் பெறு வது என்று புரியாமல் ஏங்குகிறாள். தினைப் புனத்திற்கு வருவதும், என்ன செய்வது என்று தெரியாமல் அசைவற்று அப்படியே வருத்தத்தில் ஆழ்ந்து உட்கார்ந்திருப்பதும், பின வாட்டத்துடன் வீடு திரும்புவதும் ஆன செயல்களில் ஈடுபடுகிறாள். கிளிகள் வந்து தினைக் கதிர்களைக் கொய்துகொண்டு போவ தைக் கூட கவனிக்காமல் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறாள்.

ஒரு நாள் தினைப்புனஞ் சென்று; பரணையில் ஏறி உட்கார்ந்து கொண்டு, தலைவனைப்பற்றிய நினைவில் ஆழ்ந்து, கிளிகள் கூட்டங் கூட்ட மாக வருவதையும் போவதையும் பாராமுக மாகச் சோர்வுடன் பார்த்துக் கொண்டிருக் கிறாள். அப்பொழுது சிவந்த வாயையுடைய பச்சைக் கிளியொன்று தினைக் கதிர் ஒன்றி னைக் கொய்து கொண்டு, அசைவற்று உட் கார்ந்திருக்கும் தலைவியின் முன்னால், பரணை யில் வந்து உட்காருகிறது. அதனைக் கண்ட தலைவி அந்தக்கிளியை எட்டித்தாவி எடுத்துக் கையில் பிடித்துக்கொள்கிறாள். அதன் அழ

கைப் பாராட்டிக் கொஞ்சி அதற்கு முத்தமிடுகிறாள். அது அவளிடத்திலிருந்து தப்பித்துப் போக முயற்சி செய்து பல்வேறு குரல் எழுப்புகிறது. அந்தக் குரலொலிகளைக் கேட்டு, கிளி தன்னோடு பேசுவதாக எண்ணிக்கொள்கிறாள் தலைவி. தன் மனவருத்தத்தை அதனிடம் சொல்லி ஆறுதல் பெறலாம் என்று எண்ணி அதனோடு பேசத் தலைப்படுகிறாள். கிளி அச்சத்தால் மிக்க நடுக்கங் கொள்கிறது.

"பச்சைப் பசுங்கிளியே! நீ எதற்காக அஞ்சுகிறாய்! இங்குள்ள தினைக் கதிர்களைக் கொய்ததால், யாரேனும் உன்னை அச்சுறுத்தி விரட்டி அடிப்பார்களோ என்பதற்காக அஞ்சுகிறாயா? நீ ஒன்றும் அஞ்ச வேண்டியதில்லை! நீ எவ்வளவு உணவை வேண்டுமானாலும் உட்கொள்ளலாம்! நான் அதற்கு உன்னை அனுமதிக்கிறேன்! உன் குறையெல்லாம் தீருமளவுக்கு நீ தினைக் கதிர்களை எடுத்துக்கொள்! நான் தடுக்கமாட்டேன்! நீ ஐயப்பட வேண்டிய தேவையே இல்லை!" என்று கிளியைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

கிளி அப்படியும் இப்படியும் பார்த்துக் குரல் கொடுக்கிறது.

"கிளியே! நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். என்னுடைய குறைபாடு ஒன்றினை நீ செய்து முடிக்கவேண்டும். உன்னுடைய வேலை யெல்லாம் முடிந்த பிறகு நீ அந்த உதவியை எனக்குச் செய்தால் போதும். உன்னை நான் இருகை குவித்துத் தொழுது இரங்கி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்!" என்று தலைவி அக்கிளியை உற்றுப்பார்த்துக் கெஞ்சிக் கேட்கிறாள்.

கிளி அப்படி இப்படித் தலையை அசைத்து அவளது முகத்தை உற்றுப் பார்க்கிறது.

"என் அருமைக்கிளியே! என்னுடைய குறைபாடு யாது என்று கேட்கிறாயா?" என்று கேட்கிறாள்.

கிளி தன் அலகை அவளது கைமீது தேய்க்கிறது.

"என்னுடைய குறைபாடு என்ன வென்றால், அதனை நான் சொல்லுகிறேன் கேள்! காய்கள் பலவாகக் காய்த்துத் தொங்கும் பலாமரங்கள் நிறைந்த மலைச்சாரலையுடைய அடுத்துள்ள ஊருக்கு, நீ உன் சுற்றத்தாரைக் காணப் போவாயல்லவா?" என்று கேட்கிறாள். கிளி இயல்பாகத் தலையசைத்துக் கத்துகிறது. தலைவி, அது தனக்குப் பதிலளிக்கிறது என்று கருதிக் கொண்டு மேலும் அதனிடம் சொல்ல முயலுகிறாள்.

"கிளியே! அந்த மலைக்கு உரியவர் தான் என்னுடைய காதலர். நான் அவரை மிகவும் காதலிக்கிறேன். அவரை மணஞ் செய்து கொள்வதிலே பெரு விழைவுடையவளாக இருக்கிறேன். ஆனால் இப்பொழுது அவர் என்னைக்காண வராமல், என்னை மறந்து அவர் ஊரிலேயே தங்கியிருக்கிறார். நீ அந்த மலைநாட்டிற்குச் செல்லும்போது, அவரைப் பார்த்து, இங்கு இந்த மலையைச் சூழ்ந்துள்ள காட்டின்கணுள்ள குறவருடைய இளைய மகளாகிய நான், முன்போலவே நாள் தோறும் தினைப்புனங்காக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன் என்ற செய்தியை அவரிடம் சொல்லவேண்டும். இதைத்தான் நான் உன்னிடம் வேண்டிச் செய்யக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் செய்தி ஒன்றை மட்டும் நீ அவரிடம் உரைத்தால், அதுவே போதுமானது. நீ எனக்காக வேறு தொல்லை ஏதும் ஏற்க வேண்டாம். நீ எனக்காக இந்த ஒரு குறையைச் செய்து முடிக்க வேண்டும். நான் உனனிடம் கேட்கும் உதவி இது ஒன்றுதான். கிளியே! தூது போவாய்! எனக்காக இந்த உதவியைச் செய்வாயா?" என்று தலைவி கிளியைக் கேட்கிறாள்.

கிளி தலையைப் பல கோணங்களிலே அசைத்துப், பலவித குரலொலிகளை எழுப்புகிறது.

தன்னுடைய வேண்டுகோளைச் செய்யக் கிளி இசைத்துவிட்டது என்று எண்ணி, தலைவி பூரிப்பும் பெருமையும் கொண்டு, பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் கிளியை வானில் பறக்கவிடுகிறாள். கிளி வெடுக்கென்று தாவிப் பறந்து, தினைப்புனந் தாண்டிச் செல்லுகிறது. அதன் செல்லும் வழியை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்த தலைவி, தன் காதலன் நாட்டிற்குத் தான் கிளி செல்லுகிறது என்று கருதி மெய்ம்மலியுவகை கொள்கிறாள். தன் உள்ளத்தில் சுமந்து கொண்டிருந்த சுமையை இறக்கி விட்டுவிட்டதிலே ஒரு கலகலப்பு அடைந்து மன அமைதி பெறுகிறாள் தலைவி!

* * *

இது, நற்றிணை - 102 ஆம் செய்யுளின் கருத்தைக் கொண்டு வரையப்பட்ட காதற் சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் 'காமமிக்க கழிபடர் கிளவி' என்னும் பிரிவின் பாற்பட்ட குறிஞ்சித்திணையைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் செம்பியனார் எனனும் புலவராவார். செம்பியன் என்பது சோழர்

குடிக்கு உரிய ஒரு பெயராதலால், இவர் சோழ மன்னர்களில் ஒருவராக இருக்கக்கூடும் என்று ஊகிக்கிறுர்கள். இவர் கிள்ளைவிடு தூதாக இச்செய்யுளை இயற்றியுள்ளார்.

கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி
அஞ்சல் ஓம்பி ஆர்பதங் கொண்டு
நின்குறை முடித்த பின்றை என்குறை
செய்தல் வேண்டுமால் கைதொழுது இரப்பல்
பல்கோட் பலவின் சாரல் அவர்நாட்டு
நின் கிளை மருங்கிற் சேறி யாயின்
அம்மலை கிழவோர்க்கு உரைமதி இம்மலைக்
கானக் குறவர் மடமகள்
ஏனல் காவல் ஆயினள் எனவே.

[நற்றிணை-102]

[பொழிப்புரை: வளைந்த திணைக்கதிர்களைக் கொய்துகொண்டு போகின்ற சிவந்த வாயையுடைய பச்சைப்பசுங்கிளியே! அஞ்சாதிருப்பாய்! நீ இக்கதிர்களைக் கொய்தல்காரணமாக யாரேனும் உன்னை அச்சுறுத்துவார்களோ என்னும் ஐயப்பாட்டைப் போக்கி, வேண்டிய உணவை உட்கொண்டு நின்குறையெல்லாம் முடித்தபின்பு உனக்கு ஒழிவு ஏற்படும்பொழுது, என்னுடைய குறைபாட்டைச் செய்துமுடிக்க வேண்டும். இதுபற்றி உன்னை நான் என் கைகளைக் குவித்துத் தொழுது இரந்து கேட்டுக்கொள்கிறேன். அக்குறைபாடுதான் யாது என்றால், பலவாய காய்களைக் காய்க்கின்ற பலாமரங்கள் மிக்க சாரலையுடைய அவர் நாட்டின் கண்ணுள்ள நின் சுற்றத்திடத்து நீ ஒருகால் செல்லுவாயேயானல் அம்மலைக்கு உரியாராகிய எனது காதலரை நோக்கி இந்த மலையைச் சூழ்ந்த காட்டின்கணுள்ள குறவருடைய இளையமகள் முன்போலவே திணைக்கொல்லையில் காவலுக்கு அமைந்து அங்கேயிருக்கிறுள் என்று இச்செய்தி ஒன்றினை மட்டும் உரைத்து இவ்வொரு குறையைச் செய்து முடிப்பாயாக!

குரல்-கதிர்; ஓம்பு-பாதுகாத்துக்கொள்; ஆர்பதம்-உணவு; கோள்-காய்.]

தலைவி தன் மனவருத்தத்தைக் குறைத்துக் கொள்ளத் தன் உள்ளக் கிடக்கையைக் கிளியிடத்திற் சொல்லுவதுபோலவும், கிளியைப் பிரிந்து வாழும் தலைவரிடம் தூது அனுப்புவதுபோலவும் புனைந்து கூறியிருக்கும் புலவரின் திறம், போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

கிளியினுல் தனக்கு ஒருசெயல் ஆகவேண்டியிருக்கிறது என்பதைக் கருத்திற் கொண்டுள்ள தலைவி, அது திணைக்கதிரை எவ்வளவு வேண்டுமானாலும் கொய்து உண்ணலாம் என்று அனுமதிக்கும் தன்மை காதலால் துடிதுடிக்கும் அவளது உள்ளத்தின் பாங்கைத் தெளிவுற விளக்குகிறது.

குறிஞ்சி நிலத்தில் பலாமரங்கள் நிறைந்திருக்கும் என்பதும், அங்கே குறவர் குடியிருப்பர் என்பதும் தெரியப்படுத்தப்படுகின்றன. பருவம் எய்திய பெண்ணைத் திணைப்புனங்காக்கும் தொழிலில் ஈடுபடுத்துவது என்னும் பழக்கம் இச்செய்யுளில் உணர்த்தப்பட்டுள்ளது. இருகைகளைக் குவித்துத்தொழும் பழக்கம் அக்காலத்திலிருந்தே இருந்து வருகிறதென்பது இச்செய்யுளால் தெரியவருகிறது.

சோடா நீரைக் கண்டுபிடித்த

சோசஃப் பிரிஸ்ட்லி

—: தஞ்சை - இளமதி :—

இன்று அகில உலகிலும் ஈஜிப்த், நாசர், இங்கிலாந்து, பிரான்ஸ், இரஷ்யா, அமெரிக்கா என்ற வார்த்தைகளை பேசாத வாய் இல்லை. இவைகள் எல்லாம் உலகின் கவனத்தை இன்று கவர்ந்துள்ளன. இதற்குக் காரணம் ஈஜப்டைத் தவிர ஏனைய நாடுகளின் அறிவியல் வளர்ச்சிதான். இந்நாடுகள் உலகின் வல்லரசுகளாக மதிக்கப்படுவதும் இக்காரணம் கொண்டே. அறிவியலில் மிகவும் முன்னேற்றம் கொண்ட நாடுகள் ஏனைய சிறிய நாடுகளை ஆக்ரமிக்க முயலுகின்றன. ஆக்ரமிப்பை அடக்க இரஷ்யா "ராக்கெட்" குண்டுகளை காட்டுகிறது. இவைகளைப்பற்றி நாம் ஆச்சரியத்தோடும் அச்சத்தோடும் பேசுகிறோமே தவிர நாம் எந்த அளவுக்கு அறிவியலில் முன்னேறி இருக்கிறோம்? நாம் ஏன் முன்னேறவில்லை? காரணம் நம்முள் பலர் சிந்திக்கும் திறனற்றவர்களாகவும், சிந்திக்கத் தெரிந்தும் சிந்திக்காதவர்களாகவும், படித்தும் அறிவிலிகளாகவும் வாழ்வதால் தான். நம்முள் சிலர் படித்து பட்டம் பெற்று அரசியலிலே பொறுப்பான பதவியிலிருந்தோர் பஜகோவிந்தமும் பரமன் ஆராய்ச்சியும், இராமயண காலட்சேபங்களும் செய்து காலம் கழித்தால் நாம் எப்படி வல்லரசாக முடியும்? இவர்கள் தாங்கள் முட்டாள்களானதோடு மக்களையும் அவ்வழிப் படுத்துகின்றனர். நாட்டை சிந்திக்கவைத்து சீர்திருத்த பாதையில் அழைத்துச்செல்லும் சிந்தனைச் சிற்பிகளையும், அறிஞர்களையும் நாக்கில்நரம்பின்றித் தூற்றவும் செய்கின்றனர். இதைடத் தான் "செகப்பிரியர்" "வீனஸ் வியாபாரி" என்ற கதையில் அழகாக கூறுகிறார், "உன்னால் பாட முடிந்தால் மிகவும் நல்லது, இல்லையேல் பாடுவோரின் இசையை ர்சிக்கக் கற்றுக்கொள். இரண்டுமே உன்னால் முடியவில்லை யென்றால் நீ மனிதனேயல்ல மரக்கட்டைதான்" என்கிறார். இதுவே இவர்களுக்கும் பொருந்துமல்லவா? "நீ நாட்டை திருத்தி மக்களுக்காக உண்மையாகப் பாடுபடு; இல்லையேல் பாடு படுவோர்க்கு பாதையைவிடு; இரண்டுமே உன்னால் முடியவில்லையென்றால் நீ மனிதனேயல்ல கேவலம் மிருகம்" என்று ஏன் கூறக் கூடாது?

நம் நாட்டில்தான் கேவலமான உருவங்கள் பல நடமாடுகின்றன. நாட்டிற்கு அநீதிகள் பல செய்த பின்னும் நல்லவர்போல் வேடமிட்டு மக்கள்முன் பல்லிளித்து பட்டம்பெற அலைகின்றனர். இவர்களை ஆதரிக்க ஒரு கூட்டம் உதைபட்டபின்னும் வாலையாட்டி எஜமான் பின் ஓடும் நாயைப்போல நன்றியோடு ஓடுகிறது. ஈடன் செய்தது இங்கிலாந்தின் நன்மைக்காக என்றாலும் நேர்மையற்றது என்றவுடன் இங்கிலாந்து மக்கள் உடனடியாக எதிர்ப்பை காட்டுகின்றனர். அதைப்போல நம்மால் இயலவில்லை. ஆனால் நமக்காக நம் தாயகத்துக்காகப் பாடுபட்டு நம்மை அறிவுப் பாதையில் அழைத்துச் செல்லும் அறிஞர்களை இந்த நாட்டில்தான் நாஸ்தீகர்கள் என்றும், துரோகிகளென்றும், நம்மவர்களாலேயே நம்மையும் நம் நாட்டை காட்டிக்கொடுக்கும் நிலை இருந்து வருகிறது.

இன்று சாதாரணமாக ஒரு கிராமத்திலிருந்து பெரிய நாகரிக நகரம் வரை, நாட்டை ஆள்வோரிலிருந்து சாதாரண ஏழைவரை "சோடா நீர்" என்றால் தெரியாதவரில்லை. உலகில் சோடா இல்லாத ஊரும், சோடா குடிக்காதவர்களும் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம். வயிற்று வலியா? சோடா குடி! நெஞ்சு வலியா? அஜீரணமா? மயக்கமா? எதற்கும், சோடா சர்வசாதாரணமாகப் பயன்படுத்தப்படுகிறது. அதிலும் சோடா உடைத்தவுடன் நன்றாக நுரைத்தெழுந்தால் நல்ல சோடா என்றும், நுரைத்தெழவில்லையென்றால் நல்லதல்ல என்றும் பேசுவதைக் கேட்கிறோம். இந்தச் சோடாவைக் கண்டு பிடித்தவர் யார்? எப்பொழுது? எப்படி? என்பதை நாம் தெரிந்துகொள்வது நலம்.

18 ஆம் நூற்றாண்டில், இங்கிலாந்தில் லீட்ஸ் (Leeds) என்ற பகுதியிலிருந்து சோசஃப் பிரிஸ்ட்லி என்பார் புதிய அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ஒரு அறிவியல் அறிஞர். இவர் நடு இரவில் வீட்டிலிருந்து எழுந்து வெளியே போவார். இவர் எங்கே போகிறார் என்பதை அறிய, மக்கள் ஆவல் கொண்டனர். இவர் வெளியே ஒரு திறந்த வெளிக்குச்

சென்று அறிவியல் ஆராய்ச்சி செய்தார் என்பது பின்பு தான் புரிந்தது. இவர் இரவில் தம் வீட்டின் அருகேயிருக்கும் திறந்த வெளிக் குச் சென்று சிறிய மரத்துண்டை ஒரு மெழுகு வத்தியால் கொளுத்துவார். கட்டை எரிந்து கொண்டிருக்கும்போது, ஒரு வகை புகை வெளிப்படும். அதில் எரியும் மெழுகுவத்தி யைக்கொண்டுபோவார் அது அணைந்துவிடும். இதன் காரணத்தைக் கண்டறிய முயன்றார். கட்டை எரியும் போது ஒரு வகை வாயு வெளிப்படுவதைக்கண்டார். கட்டை எரிவதற் குக் காற்றிலிருந்து ஒருவகை வாயு தேவைப் படுகிறது என்பதையும் கண்டார். வெளிப்படும் வாயு கரியமிலவாயு; இது எரியும் பொருளை அணைக்கும் என்றும் காற்றிலிருந்து கட்டை எரியும்போது இழுக்கப்படும் வாயு பிராண வாயு என்றும் கண்டுபிடித்தார். கரியமில வாயுவைப் பின் தனியே எடுத்துத் தண்ணீ ரில் கலந்தார். இந்தத்தண்ணீரை அருந்திய வுடன் ஒரு வகை உருசியும், உடலுக்குத் தனி தருவதைக் கண்டார். இதுதான் சோடா நீர். சோடா நீரை அறிவியல் அறிஞர் பிரிஸ்டலி கண்டு பிடித்தவுடன் இவரை பலரும் பாராட் டினர். இவருடைய ஆர்வம் மேலும் மேலும் வளரத் தொடங்கிற்று.

மேலும் இவர் காற்றை ஆராய்ச்சி செய்தார். அதில் பல வாயுக்கள் கலந்திருப்பதைக் கண்டுபிடித்தார். அவற்றில் இவர் உலகுக்கு முதன் முதல் கண்டுபிடித்துக் காட்டிய பிரா ணவாயு மிக முக்கியமானது ஆகும். சூரிய ஒளியை இரச ஆவியில் (Oxide of Mercury) நேராகப் பாயும்படி செய்தார். இதிலிருந்து ஒரு வகை ஆவி வெளிப்பட்டது. இதைத் தனியே எடுத்து ஒரு எரியும் கோலைக் கொண்டு போகும்போது இன்னும் பேரொளி வீசி எரிந்தது. இதுதான் பிராணவாயு என்று உலகுக்கு அறிமுகப்படுத்தினர். இது வாசனை யற்றது. இது மனிதனின் சுவாசத்துக்கு மிக வும் அவசியம என்பதைக் கண்டுபிடித்தார். இதைத் தொடர்ந்து ஆராய்ந்ததில் இது இருதய நோய்களுக்குப் பயன் படும் எனக்கண் டார். இருதய நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியைப் பிராணவாயுவின் குழல் செலுத்து முறையால், (Oxygen pumping) உல கிலேயே முதன் முறையாக 1775ம் ஆண்டு மார்ச்சு திங்கள்8ஆம் நாள் காப்பாற்றினர். மருத்துவ உலகம் இவரைப் பாராட்டியது. அறிவியல் உலகம் இவரைப் பெருமைப்படுத் தியது. மக்கள் இவரை வாழ்த்தினர். இவ ருடைய இந்த அரியசாதனையால் இன்னும் உலகில் சுவாசிக்க இயலாமல் இறக்கும் தரு வாயிலிருக்கும் நோயாளிகளைக் காப்பாற்றி வருகிறார்கள். இதை மருத்துவ மனைகளில் காணலாம். இவரைப் பாராட்டி உலக அமைப் புக்கள் பல பரிசுகள் வழங்கின. இவரைப் பாராட்டி இங்கிலாந்தின் இராயல் கழகத் தினர் (Royal Society) மிகச்சிறந்த 'கோப்ளி பதக்கத்தை' (Copley Medal) அளித்தனர். இவர்தான் இரப்பருக்கு தொழிலாகு பெயர் இரப்பர் (Rubber) என்பதை ஆங்கிலத்தில் சூட்டினர்.

உலகமக்களுக்கு என்றென்றும் பயன்படக் கூடிய நன்மைகளை நிலைநாட்டிவிட்டுச் சென்ற அறிவியலறிஞருள் ஒருவரான சோசஃப் பிரிஸ்ட்லி அழியாப் பாராட்டுதலுக்கும், பெரு மைக்கும், புகழுக்கும் என்றென்றும் உரியவ ராவார். வாழ்க அவர் புகழ்!

உலகப் போரின் பொழுது, விமானத் தாக்குதலைச் சமாளிக்கும் பாதுகாப்புச் சங்கம் ஒன்று, அமெரிக்காவில் ஒரு ஒத்திகை நடத்தினர்கள். அபாயச் சங்கு ஊதினல், ஒரு பெரிய கட்டிடத்தில் வேலை செய்பவர்கள் எவ்வளவு நேரத்தில் வெளியே வந்துவிடுவார்கள் என்பதைக் கணக்கிட, அபாயச் சங்கு ஊதப்பட்டது. கட்டிடத்தில் வேலை செய்தவர்கள் வெளியேற 3 நிமிடம் 27 வினடி பிடித்தது. பாதுகாப்புச் சங்கத் தலைவர் மிகவும் திருப்தியடைந்தார்.

அன்று மாலை மீண்டும் அதிகாரி அந்தக் கட்டிடத்தின் பக்கம் வந்தார். 5 30 மணி வேலை முடியும் நேரத்தைக் குறிக்கும் சங்கு ஊதியது. வேலைபார்த்த வர்கள் வேகமாக வெளியே வந்தார்கள். பாதுகாப்புச் சங்க அதிகாரி, அவர்கள் வெளியேறும் நேரத்தைக் கணக்கிட்டார். 12 நிமிடம் 10 வினடிதான் இப்பொழுது பிடித்தது.!

கதிரவன் தோன்றும் நாடு

(புகழேந்திக் கரிகாலனர்)

உலக வரலாற்றில் தமிழ் நாடும், சீன நாடும் பழமைக்கும் பழமை பொருந்திய நாடுகளாக விளங்குகின்றன. இவை இரண்டும் அரசியல், வாணிகம், கலை, நாகரிகம் ஆகிய துறைகளில் விரிவும் சிறப்பும் பெற்று ஓங்கி வளர்ந்து அவைகளை அயல் நாடுகளுக்கு வாரி வாரி வழங்கின. அவற்றின் பலனால் பல நாடுகள் நாகரிக முற்றன. அவற்றிலே ஒன்றுதான் சப்பான். சப்பானிய வரலாறு மிகப்பிற்பட்டுத் தோன்றியதாகும்.

கி. மு. 1122ஆம் ஆண்டுகாலத்தில் சீன நாட்டை ஆண்டு கொண்டிருந்த கிட்சே (Ki-Tse) என்ற பேரரசர் ஐயாயிரம் ஆட்களுடன் கொரியா நாடு நோக்கிப்புறப்பட்டார். அவருடன் கைத்தொழில் தச்சரும், கண்ணுள் வினைஞரும், வேளாண்மை செய்வாரும், பட்டால் அணிவகை தைக்கும் பால் கொழுமாக்களும் சென்றனர். இவ்வாறு சென்றவர்கள் கொரியாவைப் பலகாலம்வரை ஆண்டனர்.

சப்பானியரின் முன்னோர் கொரியாவிலிருந்து வந்தவர்கள் என்பது உலக வரலாறு தரும் விளக்கம். சப்பானிய நாட்டவர் சிலர் மலாயாசியாவிலிருந்து வந்தவர்கள் என்பதும், இன்னும் சிலர் மங்கோலிய மரபைச் சேர்ந்தவர்கள் என்பதும் உலக வரலாறு தரும் மற்றிரு விளக்கங்கள். இவர்களில் ஐனஸ் (Ainus) என்னும் மக்களே பூர்வீகக் குடிகள் என்று உலக வரலாறு உரைக்கின்றது.

ஐனஸ் மக்கள் சில காலத்திற்குப் பின் சப்பானிலிருந்து துரத்தப்பட்டதும் கி. பி. 200-ம் ஆண்டுகாலத்தில் அங்கு அமைக்கப்பட்ட யாமாதோ (Yamato) அரசாட்சியை ஜிங்கோ (Jingo) என்னும் பெயரமைந்த பெரும் பெண்ணரசி ஆண்டு வந்தாள். இவள் மக்களுக்கு உரிமை வழங்கினாள். ஜிங்கோ ஆட்சியின் போது மக்களுக்கு அளவு கடந்த உடல் வலியோடு, உள்ளத் துணிவும் வளர்ந்தது. யாமாதோவும் கொரியாவுடன் நெருங்கிய உறவு கொள்ள முனைந்தது. சீன நாகரீகமும், சீன-மொழியும் இப்பொழுதுதான் கொரியா வழியே யாமாதோவுக்குப் போயின. சீன மொழி யாமாதோவில் வழங்கி பேச்சு ஒலியில் வேறுபாடு அடைந்தது கி. பி. 400ஆம் ஆண்டுகாலத்தில் யாமாதோ ஒரு சிறந்த நகராகக் காட்சி அளித்தது.

சப்பானிய மக்களுக்கு சின்தோ (Shinto) என்னும் சமயம் சிறந்தாக கருதப்பட்டது! இச்சமயத்தில் இயற்கை தோற்றத்தை வணங்கும் பழக்கமும், ஆன்றவர் கொள்கையை அருமையாகப்போற்றும் வழக்கமும் கலந்திருந்தன. மக்கள் சின்தோ சமயத்தைச் சொந்த சமயமாகக் கருதியது போலவே அரசனும் இதனை - வழிப்பட்டு வந்தான் யாமாதோ முழுமையிலும் சின்தோ சமயத்திற்குக் கோவில்களும் நிலையங்களும் இருந்தன. இவ்வாறு சின்தோ சமயம் சிறப்புற்று விளங்கியகால் கொரியா நாட்டு அரசன் ஒருவன் யாமாதோ அரசனுக்குப் புத்தரின் பொற்சிலை ஒன்றையும், பௌத் நெறி முதலாம் வழிகளை உரைக்கும் நூல்களையும்,, சமயச் சொற்பொழிவாளர்களையும் அனுப்பினான். சின்தோ சமயத்துக்கும் பௌத்த சமயத்துக்கும் சில காலம்வரை போராட்டம் நிகழ்ந்தது. யாமாதோ மக்கள் பௌத்த மதத்தை வெறுத்தனர். சமயச் சொற்பொழிவாளர்களை கண்ட இடங்களிளெல்லாம் விரட்டினர். ஆயினும் சின்தோ சமயம் நாளடைவில் ஆதரவு குறைந்த நிலையை அடைந்துவிடவே, பௌத்த மதம் தலை நிமிர்ந்து வாழத் தலைப்பட்டது.

யாமாதோவில் வாழ்ந்த மக்கள் நாரா (Nara) என்னும் புதிய தலைநகர் ஒன்றை உருவாக்கினார். இத் தலைநகரிலிருந்து சப்பானிய தூதுக்குழு அடிக்கடி சீன நாடு சென்று வந்தது. இத் தூதுக்குழுவால் பௌத்த மதம் நிலைபெறுவதற்கான அடிப்படைக் கருத்துக்களும் சப்பானுக்குக் கொணரப்பட்டன. சீன நாட்டை ஆண்டுக்கொண்டிருந்த டாங் (Dang) மரபினர் அத் தூதுக் குழுவிற்குச் சிறந்த வரவேற்பளித்தனர். நாராவிலிருந்து சீன நாடு போந்த குழுவினர் பலகாலம்வரை தங்கியிருந்தனர். சீன நாட்டின் புதிய தலைநகராகிய சி-அன்-பு என்ற இடத்தில் தூதுக் குழுவினர் தங்கியிருந்துவிட்டு நாரா திரும்பினர். சீன நாட்டின் சி-அன்-பு என்ற புதிய தலைநகரின் அழகையும், அமைப்பையும் எடுத்துரைத்து அது ஆசிய அனைத்திலும் புகழ் பெற்று விளங்கும் முறையையும் விளக்கவே சப்பானிய மக்கள் தங்கள் தலைநகராகிய நாராவைச் சீன நாட்டின் சி-அன்-பு என்ற - தலைநகர் போல்

விரிவும், அழகும் அமைந்ததாக்க விழைந்தனர்.

சிறிது காலத்திற்குப் பிறகு நாராவை ஒரு குடும்பம் தனது மேலாண்மைக்குக் கீழ் அடக்கி ஆள தொடங்கியது. இக் குடும்பத்தின் பெயர் சொகா குடும்பம் (Soca Family) என்பதாகும். இக் குடும்பத்திற்குத் தலைவனாக இசோடுகு தைசி (Shotukn Thishi) என்பவன் தலைமை ஏற்று நாராவையும், சப்பானிய மக்களையும் ஆள முற்பட்டான். இவன் சீன மொழியிலிருந்த கன்பூசியஸ் என்னும் சீன அறிஞரின் நூல்களைப் பயின்றான். பௌத்த நெறிகளைக் கற்றான். கன்பூசியஸ் அரசியல் கருத்தையும், புத்த பெருமகனாரின் அற நெறியையும் ஓர் உருவாக்கி அதன் மீது தமது அரசியலை அமைத்தான்.

இசோடுகு தைசி பௌத்த நெறிகளில் ஆழ்ந்த பற்று உடையவனாகியதும், சப்பானிய மக்களையும் பௌத்த மதத்தைத் தழுவும்படி கட்டளை இட்டான். சப்பானில் குறுநில மன்னர்களாக இருந்து கொண்டு வந்தவர்களை எல்லாம் அடக்கி ஒரு குடையின் கீழ் ஆள வேண்டும் என எண்ணினான். அவ்வாறு எழுந்த அவன் எண்ணமும் நிறைவேறியது. சிறு சிறு கூட்டமாகப் பிரிந்து கிடந்த மக்களையும், குறு நில மன்னர்களையும் ஒன்றுபடுத்தி சப்பானிய வரலாற்றிலேயே கி. பி. 600-ம் ஆண்டுகாலத்தை ஓர் ஆரம்பகாலமாக்கினான்.

இவனுக்குப் பின்னர் காகா டோமி நோ காமடோரி (KaKa Tomi no Kamatori) என்பவன் ஆளும் பொறுப்பை ஏற்றான். இவன் அரசியல் வரலாற்றைச் சிறிது திருத்தம் செய்தான். சீன நாட்டின் அரசியல் முறைகள் சிலவற்றைச் சப்பான் அரசியல் வரலாற்றில் புகுத்தித்தமது ஆட்சிக்காலத்தைச் சிறப்புப் படுத்திவிட்டான். பழைய தலைநகராக இருந்த நாராவை கியோடா (Kyoto) என்று மாற்றி அமைத்தான். பிறகு நெடுங்காலம்வரை கியோடா தலைநகராவே விளங்கியது. 200 ஆண்டுகள்வரை காகா டோமி நோ காமா டோரி என்பவனின் புஜிவாரா (Fujivvara) குடும்பம் சப்பானை அடக்கிஆண்டு மறைந்தது.

பிறகு சிமான்களின் வகுப்பு ஒன்று சப்பானை ஆள தொடங்கியது. இவர்களுக்கு "தாய்மியோ" என்ற பெயருண்டு என்பர். தாய்மியோ வகுப்பு டைரா, மினகோடா என்ற இருபெருங் குடும்பமாக வடிவெடுத்து புஜிவாரா குடும்பத்தை அழித்துக்கொண்டு வருகையில் தலைதப்பிய புஜிவாரா குடும்பத்தின் வீரக்காளைகள் நால்வரில் ஒருவனான யோரி டோமா என்னும் இளைஞன் பிற்காலத்தில் ஒரு கடற்போரில் முற்கூறிய குடும்பத்தினரை முறியடித்து, அக்குடும்பத்தினரைத் தலைநகரிலிருந்தே துரத்திவிட்டான். யோரிடோமாவின் திறமை அறிந்த பேரரசர் அவனுக்கு "கொடிய மக்களை அடக்கவல்ல தானைத்தலைவன்" என்ற விருது அளித்தார். இந் நிகழ்ச்சி கி. பி. 1192-ஆம் ஆண்டு காலத்தில் நடந்ததாகும்.

கியோடோவில் வாழ்ந்து வந்த யோரிடோமா, காமகூரா என்ற இடத்தில் இராணுவத் தலைநகர் ஒன்றைத் தோற்றுவித்தான். பழைய சோகான் அரசு காமகூராசோகான். அரசு எனப் பெயர் பெற்று நூற்றைம்பது ஆண்டுகள்வரை அமைதியோடு சப்பானை ஆண்டுவந்தது. இதற்குப் பின்னர் உள்நாட்டுக் குழப்பங்கள் எழுந்தன. இவ்வாறு சப்பான் பிற்காலத்தில் நெடுங்காலம்வரை சீரழிந்துதான் வாழ்ந்தது.

சப்பான் வரலாறு துவங்கிய காலத்திலிருந்து தமிழ் நாட்டின் நுண்கலைகளாகிய ஓவியம், சிற்பம் முதலாய கலைகளும், சீன நாட்டின் மண்கலம், பட்டு ஆகியவையும் சப்பானுக்குச் சென்றன. கி. பி. 1191-ஆம் ஆண்டு காலத்தில் ஒரு பௌத்த துறவி சீன நாட்டினின்று தேயிலை விதைகளைச் சப்பானுக்குக் கொண்டு போய்க் கொடுத்துதவினார் என்று கூறப்படுகிறது.

நாரா தலைநகராக இருந்தபொழுது சீனப் பேரரசன் ஒருவன் சப்பானிய அரசனுக்கு மடல் ஒன்று அனுப்பினானாம். அம்மடலில் தாய்-நி-வுங்-கோக் என்று தமது நாட்டை அப் பேரரசன் குறித்திருந்தது கண்டு யாமாதோ என்ற பெயரை ஆய்வு நடத்தினானும். யாமாதோ என்ற பெயரில் அழகும்-சிறப்பும், ஆழமும்-விரிவும் இல்லாமை கண்டு இதனை விடுத்துத் தமதுநாட்டை "டாய் நிப்பன்" என்று அழைக்க முனைந்தானும். இதற்குக் "கதிரவன் தோன்றும் நாடு" எனப் பொருளாம். நிப்பன் என்ற பழைய சொல்மருவி சப்பான் என வழங்கியது என்பர். வெனிஸ் நகரத்து அறிஞரான மார்க்கோ போலோ சீன நாட்டிற்குச் சென்று திரும்பி தமது பயணத்தின் பயனைப் பற்றி நூல் எழுதப் புகுந்தகால், சப்பானை நி-புங்-கோக் என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக "சிபாங்கோ" எனச் சிறிது மருவி கூறியுள்ளார். சப்பான் நாட்டின் வரலாற்றைக் கேள்வியுற்ற மார்க்கோ போலோ ஒருவரே இதனை குறிப்பிட்டுள்ளார். பழைய நூல்களில் இவரின் நூல் ஒன்றே சப்பானைக் குறிப்பிடும் நூலாகும்.

அண்டசராசரம்

(57)

பரசுராம அவதாரம்

சப்த இருடிகளில் ஒருவரான சமதக்னியின் மகனாக விட்டுணு அவதரித்தார். பரசுராமர் என்று பின்னால் வழங்கப்பட்டபோதிலும், முதலில் ராமர் என்ற பெயர் மட்டும்தான் குழந்தைக்கு இருந்தது. விட்டுணு எடுத்த மூன்று அவதாரங்களில் ராமர் என்ற பெயர் இருந்திருக்கிறது. பரசுராமன், ரகுராமன், பலராமன்-மூன்று பெயர்களும் வெறும் ராமன் என்ற பெயரில் ஆரம்பித்தவைகளாகும். ஒன்றையொன்று வேறுபடுத்திக் காட்ட, பரசுராமன், கோதண்டராமன், பலராமன் என்று கையில் வைத்திருந்த ஆயுதங்களைக்கொண்டு பெயர்கள் சூட்டப்பட்டன. பரசு என்றால், கோடாலி என்று பொருள். சமதக்னியின் மகனான ராமன் கையில் கோடாலி இருந்ததால், அவன் பரசுராமன் என்று பெயர் பெற்றான். ரகுவம்சத்தில் பிறந்த ராமன் கையில் கோதண்டம் (வில்) இருந்ததால், கோதண்டராமன் என்றும், கிருட்டிணாவதாரத்திலிருந்த ராமன் கலப்பையில் வலிவு பெற்றிருந்தமையால் பலராமன் எனவும் பெயரிடப்பட்டனர்.

சமதக்னியின் மகனான ராமன் பரமசிவனை வேண்டித் தவமிருந்தான். ராமன் விட்டுணுவின் அவதாரமென்றாலும், சிவனை வேண்டி வரங் கேட்டதாகக் கதை. தவத்தின் முடிவில், சிவன் தோன்றி அவனுக்குப் பரசு (கோடாலி) கொடுத்தார். அதிலிருந்து, பரசுராமன் அதாவது கோடாலிராமன் என்ற பெயர் வந்தது. கோடாலி வாங்கியதையல்லாமல், பரமசிவனிடம் பரசுராமன் வில்வித்தைக் கற்றுக்கொண்டானாம். அப்பொழுது முருகப் பெருமானும் கூட இருந்து வில் வித்தை பயின்று வந்தார். ஒருநாள் உமாதேவியின் முன்னிலையில் சிவன் இருவரையும் வரவழைத்து, அவர்களுடைய வில்வித்தையைக் காட்ட நினைத்தார். உமாதேவி முருகன் பக்கத்தில் இருந்தாள். சிவன் இருவரையும் பார்த்து, "அந்த மலையைத் துளைத்திடுக" என்று கிரௌஞ்ச மலையைக் காட்டினாராம். முருகன் முதலில் வில்லெடுத்து, அம்புகளை விடுக்க, கிரௌஞ்ச மலையைத் துளைக்க முடியவில்லை. பிறகு பரசுராமன் தனது வில்லையெடுத்து அம்பைவிட அது மலையைத் துளைத்துப் போனதாம்!

வாலியைக் கொல்வதற்கு முன், இராமன் விட்ட அம்பு ஏழுமரங்களையும், மலைகளையும், கடல்களையும், உலகங்களையும் துளைத்துக் கொண்டு சென்றதாக இராமாயணம் கூறும். அதைப்போல, பரசுராமன் விட்ட அம்பு கிரௌஞ்ச மலையைத் துளைத்துச் சென்றது. புராணக்காரரின் கற்பனை அத்துடன் நிற்கவில்லை, கிரௌஞ்ச மலைக்கு வடக்கில் இருந்து பரசுராமன் அம்பை விட்டான். அப்பொழுது கிரௌஞ்ச மலைக்குத் தெற்கில், தாமரையோடையில் அன்னப் பறவைகள் இருந்தன. பரசுராமன் அம்பு, மலையை ஆட்டிவைத்த பொழுது, அன்னப்பறவைகள் மேலெழுந்து வந்தன; உயரவந்ததும், மலையில் அம்பு வந்த வழி தெரிந்தது. உடனே அந்த துவாரத்தின் வழியாக உள்நுழைந்து வடக்குப்புறம் வெளி வந்தன. அங்கிருந்து இமயமலைக்குச் சென்று

விட்டனவாம். இந்தக்கதையும் கற்பனையும் ராமாயணத்திலும் இருக்கின்றன.

மலையைத் துளைத்ததும், மடவன்னத்தை அந்தவழியில் போகச்செய்ததுமான செயல்கள் ஒருபுறமிருக்க, கதையின்படி விட்டுணுவின் அம்சமான பரசுராமன் சிவனிடம் போய், வில்வித்தை கற்று கோடாலி வாங்கிவந்தார். சிவதனுசு என்ற வில்லையும் சிவனிடமிருந்து பரசுராமன் பெற்றதாகக் கூறுவார்கள். சமதக்னி முனிவரின் மகன் தனது குலத் தொழிலைவிட்டு, க்ஷத்திரியக்குல வித்தைகளைக் கற்று வீட்டுக்குவந்து சேர்ந்தான்.

ஒருசமயம், பரசுராமர் வீட்டில் இல்லாத பொழுது-வீட்டில் என்றால் அந்தக் காட்டில் இல்லாதபொழுது - கார்த்தவீரியார்ச்சுனன் என்ற அரசன் சமதக்னியைப் பார்க்க வந்திருந்தான். அரசனையும், அவனது சேனையையும் தன்னிடமிருந்த காமதேனுவின் உதவியால் சமதக்னி உபசரித்தார். காமதேனு கேட்டதையெல்லாம் கொடுத்ததாம். முனிவரிடமிருந்து விடைபெற்றுச் செல்லும் பொழுது, கார்த்தவீரியார்ச்சுனன் காமதேனுவை எடுத்துக்கொண்டு சென்றான். பசு திருட்டுப்போனது, அரசன்போய் நீண்ட நேரங்கழித்துத்தான் சமதக்னி முனிவருக்குத் தெரிந்தது. அப்பொழுது பரசுராமர், கோடாலியும் வில்லுமாய் வந்துசேர்ந்தார்; காமதேனு திருட்டுப்போனதை உணர்ந்து, கார்த்தவீரியார்ச்சுனனைத் தேடிச்சென்றார்.

கார்த்தவீரியார்ச்சுனன் மிகப் பராக்கிரமசாலி என்று பெயர் பெற்றவன். அவனுக்கு ஆயிரங்கைகள் இருந்தனவாம். கால்கள் மட்டும் இரண்டுதான். உருவம் எப்படியிருக்கும் என்று நினைத்துப்பாருங்கள். இரண்டுகால்கள், ஒருஉடல், ஒருதலை, கைகள்மட்டும் ஆயிரம்! மரத்தில் கொடிகள் தொங்குவதுபோல் கைகள் இருபுறத்திலும் அடர்ந்திருக்கும் சண்டைபோட ஆரம்பித்துவிட்டால், கார்த்தவீரியார்ச்சுனன் தன் ஆயிரங் கைகளாலும் சண்டைபோடுவானும். ஆதலால் ஆயிரம் பேர்கள் சண்டையிடுவது போலிருக்கும். அப்படிப்பட்ட அகோர உருவமான கார்த்தவீரியார்ச்சுனனை எதிர்த்து பரசுராமன் சென்றான்.

கோடாலியை வீசிக்கொண்டு பரசுராமன் வந்தான். அரசன் தனது படை வீரர்களை அவன் மீது ஏவினன். படைவீரர்களென்றால் ஒருவர், இருவரா? பதினேழு லட்சம் வீரர்கள், திரண்டுவந்தனராம். வாளை வீசினர் சிலர், வேலை எறிந்தனர் சிலர், குதிரையில் வந்தனர் சிலர்; யானை மீதும், தேர்மீதும் வந்தனர் சிலர். இவ்வாறு பதினேழு லட்சம் படைவீரர்கள் பெரிய யுத்தத்துக்குப் போவதைப்போல, பரசுராமனை அழிக்க வந்தார்களாம். பரசுராமர் தனியாக நின்று, கையிலிருந்த கோடாலி ஒன்றை மட்டும் வைத்து, எதிர்த்து வந்த பதினேழு லட்சம் பேர்களையும் வெட்டித்தள்ளினராம்! கடைசியாக ஆயிரங் கைகளுடைய கார்த்தவீரியார்ச்சுனனையும் கொன்று காமதேனுவை மீட்டுக்கொண்டு பரசுராமர் ஆசிரமத்துக்குத் திரும்பினர்.

அரசனைக் கொன்றுவிட்டு மகன் வந்திருப்பதைப் பார்த்த சமதக்னி முனிவர் பதறிவிட்டார். "ஓ! ராமனே! வலிமைமிக்கவனே! அரசர்கள் தேவாம்சம்பொருந்திருந்தியவர்கள் ஒரு அரசனைக் கொன்றதால், ஒரு பாபத்தை நீ செய்துவிட்டாய்! பொறுமையுடன் இருந்தால்தான் பிராமணர்களாகிய நாம் உயர்வடைய முடியும்! பிராமணர்களின் கீர்த்தி சூரியனுடைய பிரகாசத்தைப்போல வளருகிறதென்றால், அதற்கு முக்கிய காரணம் அவர்களின் பொறுமையேயாகும். அரி பரமாத்மா அதைத்தான் போற்றுகிறார். பிராமணனைக் கொல்வதை விட, அதிகமான குற்றம் ஒரு அரசனைக் கொல்வதால் ஏற்படுகிறது; தண்டனையும் அதிகமாகிறது. ஆதலால் பிராயச்சித்தமாக, புண்ணிய தீர்த்தமாடிவா!" என்று சமதக்னி பரசுராமனை அனுப்பினர். பரசுராமர் ஒரு ஆண்டுக்காலம், புண்ணிய நதிகளில் ஆடி வந்து சேர்ந்தார்.

பரசுராமரின் தாயான இரேணுகை ஒருநாள் கங்கை நதிக்கு நீரெடுத்துவரச் சென்றாள். அப்பொழுது சித்திரசேனன் என்ற காந்தருவன் நீரில் விளையாடிக் கொண்டிருந்தான். அவனது அழகில் சற்று மயங்கி, தான் வந்த காரியத்தையும் மறந்து இரேணுகை கங்கைக் கரையில் தங்கிவிட்டாள். பிறகு நேரங்கழித்து, இரேணுகை குடிலுக்குத் திரும்பியதும், அவளது ஒழுக்கத்தைப் பற்றி சமதக்னி முனிவருக்குச் சந்தேகம் உண்டானது. தனது பிள்ளைகள் நால்வரைக் கூப்பிட்டு இரேணுகையைக் கொன்றுவிடும்படி கட்டளையிட்டார். பரசுராமனைத் தவிர, மற்ற மூவர்கள் தாயைக் கொல்ல மறுத்துவிட்டார்கள். சமதக்னி அவர்களை மிரட்டினர், "தன்சொல்லை நிறைவேற்றாவிட்டால் கொன்றுவிடுவேன்" என்று எச்சரித்தார். எது நேர்ந்தாலும் சரியென்று தாயைக் கொல்ல அவர்கள் மறுத்தனர். எஞ்சியிருந்த நான்காவது மகன் பரசுராமனைக் கூப்பிட்டு "தாயைக் கொலை செய்வாயாக!" என்று கட்டளையிட்டார்.

தந்தையின் கட்டளையைக் கேட்டதும் பரசுராமர் "இதோ!" என்று தனது கோடாலியை ஓங்கிப் போட்டார். தன்னைப் பெற்றெடுத்தத் தாயின் கழுத்து மீது. தலை வேறாக விழுந்தது. தாயின் தலை தனயனின் காலடியில் கிடந்தது. இரத்தஞ் சொட்டும் கோடாலியுடன் பரசுராமர் நின்றார். "என் சொல்லை நிறைவேற்றாத இந்த மூன்று பேர்களையும் கொன்றுவிடு!" என்று தந்தை கட்டளையிட்டார். பரசுராமன் மறுபடியும் கோடாலியை ஓங்கிப்போட்டார் இரத்தம் பீரிட்டது; முதல் மகனின் தலை விழுந்தது. இரத்தத்தைக் கழுவாமல், இரண்டாவது அண்ணனை தலையைப் பிடித்து வெட்டினான். இரத்தம் ஓடியது, இரண்டாவது தலை உருண்டது. மூன்றாவது வெட்டில், மூன்றாவது அண்ணனும் இரண்டாக்கப்பட்டான். இரத்த வெள்ளத்தில் நான்கு தலைகள் மிதந்தன.

"இவன்தான் நல்ல மகன்" என்று சமதக்னி முனிவர் அவனை வாழ்த்தினார். பரசுராமரின் பராக்கிரமத்தை, தாயின் தலையை வெட்டிக் காட்டிய வீரத்தைமெச்சி, சமதக்னி, "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். தாயும் தனது உடன் பிறந்தாரும் உயிர்பெற்றெழ பரசுராமர் வேண்டினார். சமதக்னி கோபந் தணிந்து, கொலைசெய்யப்பட்டுக் கிடந்தவர்களுக்கு உயிர்தர ஒத்துக்கொண்டு, மந்திர நீர் தயாரித்துப் பரசுராமனிடம் கொடுத்து, இறந்தவர்கள் உடல்கள் மீது தெளித்து எழுப்பச் சொன்னாராம். வெட்டுண்டு கிடந்த உடல்களையும், தலைகளையும் பரசுராமன் ஒன்றுபடுத்தித் தண்ணீரைத் தெளித்தான். இதில் தவறுதல் ஏற்பட்டு, தாயின்தலை வேறொரு உடல் மீது பொருத்தப்பட்டு விட்டதாம். உயிர்பெற்றெழுந்த இரேணுகையின தலை மகன் உடல் மீதும், இரேணுகையின் உடல் மீது ஒரு மகனின் தலையும் இருக்கக்கண்டு, சமதக்னி "உனக்குத் தலை மாத்திரமே போதுமானது. அவ்வகை கிராமங்களில் பூசிக்கப்படுவாய்!" என்று அருளினாராம். அதனால் பெண்தலை மட்டும் கிராமங்கள் பலவற்றில் பூசிக்கப்படுகின்றன என்று, கிராமப்புறங்களில் காணப்படும் பெரிய தலை கடவுள்களுக்குக் காரணக் கதையாக இதைப் புராணம் கூறுகிறது.

இரேணுகை கார்த்தவீரியார்ச்சுனனிடம் மயங்கிவிட்டதாகச் சிவபுராணம் கூறும். அவள் கண்ட காந்தருவனின் பெயர் சித்தார்த்தா என்று பாகவத புராணத்தில் கூறப்பட்டுள்ளது. தலையும் உடலும் மாறுபட்ட கதை பாகவத புராணத்தில் கிடையாது. சமதக்னி வரந்தந்ததும், தூக்கத்திலிருந்து எழுபவர்களைப்போல இரேணுகையும், மூன்று பிள்ளைகளும் உயிர்பெற்று எழுந்தார்கள் என்பதுமட்டும் பாகவதத்தில் எழுதப்பட்டுள்ளது.

பரசுராமனால் கார்த்தவீரியார்ச்சுனன் கொல்லப்பட்டதும், கார்த்த வீரியார்ச்சுனனுடைய குமாரர்கள் சமயம் பார்த்திருந்து பரசுராமன் வெளியேறியிருக்கும்போது, பர்ணசாலைக்குள் நுழைந்து சமதக்னியை கொலைபுரிந்து விட்டுச் சென்றனர். திரும்பி வந்த பரசுராமன் பழிக்குப் பழிவாங்கக் கருதி, கோடாலியைத் தூக்கிக்கொண்டு, சத்திரிய வம்சத்தையேக் கருவருக்கத் தொடங்கினார். அரச குடும்பத்தினர் எவரைக் கண்டாலும் கோடாலியால் வெட்டிக் கொலைசெய்துவிடுவார். கார்த்தவீரியார்ச்சுனனின் குமாரர்கள் கொல்லப்பட்டனர். அவர்களிலிருந்து தொடங்கி, இருபத்தோரு தலைமுறை அரசக்குடும்பத்தினரைப் பரசுராமர் கொன்றுவந்தார்.

சத்திரிய வம்சத்தினரைக் கொன்று குவிப்பதால், இரத்தம் பெருகி, ஏழு பெரிய மடுக்களில் போய் தங்கியதாம்! இரத்தம் ஆறு போல ஓடி, பெரிய ஏரியாகத் தேங்குவது கண்டு, விட்டுணுவின் அம்சமான பரசுராமனுக்கு வருத்தமோ சோகமோ தோன்றவில்லை. மாறாக இரத்த ஓடையைப் பார்த்ததும் பரசுராமனுக்கு மகிழ்ச்சி உண்டானதாம். அப்படியே இரத்த வெள்ளத்தில் விழுந்து, நீச்சல் அடித்தாராம்.

இவ்வாறு பரசுராமன் இரத்த வெள்ளத்தில் குளித்து எழுந்தான் என்பது கவிச்சக்ரவர்த்தி கம்பநாட்டாரின் கற்பனையில் வெளிவந்துள்ளது. பாலகாண்டம், பரசுராமப்படலம் பதிமூன்றும் பாடலைக் கவனிக்கலாம்.

> நிருபர்க்கொரு பழிபற்றிட நிலமன்னர் குலமும்
> கருவற்றிட மழுவாள்கொடு களைகட்டுயிர் கவரா
> இருபத்தொரு படிகாலெழு கடலொத் தலை யெறியும்
> குருதிப் புனல் அதனிற்புக முழுகித் தனிக் குடைவான்.

இருபத்தோரு தலை முறைகளைப் பரசுராமன் கொன்றிட, அதனால் "கடலையொத்து அலை வீசும் இரத்தவெள்ளம்" உண்டாகியதாம். அவதார மூர்த்தியாகிய பரசுராமன் என்ன செய்தானென்றால், "அதனிற்புக முழுகித் தனிக் குடைவான்" அந்த இரத்த வெள்ளத்தில் தன்னுடைய உடம்பு அமிழும்

படி முழுகி உள்ளே குடைந்து நீராடி வருவான்.

"இரத்த ஆறு ஓடியது" என்று உயர்வு நவிற்சியால் கவிஞர்கள் கூறுவார்கள். ஆனால் பரசுராம அவதாரத்தில், இரத்த ஆறு ஓடி, ஐந்து மடுக்கள் நிரம்பிவிட்டதாம். இந்த ஐந்து இரத்ததடாகங்களும், "சியமந்த பஞ்சகம்" என்று பெயர்பெற்றன. இது ஒரு புண்ணிய தீர்த்தமாம். இந்த இரத்த வெள்ளத்தில் நீராடி வெளிவந்த பரசுராமன், இறந்த தனது தந்தைக்குச் செய்யவேண்டிய கிரியைகளை அந்த "இரத்தத்" தீர்த்தத்தில் செய்தானாம்.

பரசுராமர் சத்திரிய வமிசத்தை இருபத்தொரு தலை முறை கருவறுத்தார் என்பதற்கும் புராணக் கதையில் காரணம் காட்டப்படுகிறது சமதக்னி கொலைசெய்யப்பட்டதும், இரேணுகை பர்ணசாலையிலிருந்து வெளிவந்து கார்த்தவீரியார்ச்சுனனை எதிர்த்தாளாம். அப்பொழுது அவள் மீது இருபத்தொரு அடிகள் விழுந்ததாம். மகன் வருமளவும் அவள் உயிர் தாங்கி, அவன் வந்ததும் நடந்ததைச் சொல்லிவிட்டுச் செத்தாள். தாய் விழுந்த அடிகளை எண்ணிப்பார்த்து, இருபத்தொரு தலை முறை சத்திரிய வமிசத்தைப் பரசுராமர் அழித்தார். மற்றொரு புராணத்தில், மகனைப் பார்த்ததும் இரேணுகை இருபத்தொரு தடவைகள் மார்பில் அடித்துக் கொண்டு அழுதாளாம். அந்த அடிகளை எண்ணிப்பார்த்துக்கொண்டிருந்த பரசுராமன், ஒவ்வொரு தடவை அறைந்து கொண்டதற்கும் ஒரு தலைமுறையாக, இருபத்தொரு தலைமுறை கார்த்தவீரியனின் குடும்பத்தை அழித்தாராம். வரலாற்றில் அவ்வாறு அழிக்கப்பட்ட அரசபரம்பரை இருந்ததாகத் தெரியவில்லை.

கார்த்தவீரியார்ச்சுனன் தவறு செய்ததற்காகப் பூலோகத்து அரசர்களெல்லாம் கொல்லப்பட்டனர்.

பரசுராமன் அரசர்களை இருபத்தோரு தலைமுறையை அழித்ததாக உள்ள புராணக்கதை, வடஇந்தியாவில் புராணகாலத்தில் பிராமணர்களுக்கும் சத்திரியர்களுக்கும் உண்டான பகையைக் காட்டுவதாகும் என்று கூறுவார்கள்.

"அகம்பாவமும் கெடுதலும் உள்ள சத்திரிய வகுப்பினர் பூமிக்குப் பாரமானார்கள் பிராமணர்களுக்கு விரோதமானார்கள், அதனால் அவர் (விட்டுணுவின் அம்சம்) அவர்களை அழித்தார். மிகச்சிறிய தவறைச் செய்திருந்த போதிலும், இராச தாமச குணங்களையுடைய சத்திரிய வமிசத்தினர் அவரால் கொல்லப்பட்டனர்."

(பாகவதம் 9வது காண்டம், 15வது அத்தியாயம், 15வது சுலோகம்)

"பிராமண வருணத்தை எதிர்த்த, பிராமணர்களுக்கு விரோதமான அவர்களின் இரத்தத்தை ஒரு பெரிய ஆறாக அவன் ஓடச்செய்தான்."

(பாகவதம் 9வது காண்டம், 15வது அத்தியாயம் 18வது சுலோகம்)

பரசுராமனைப்பற்றிய புராணக் கதைகளிலிருந்து, வேதமொழியினர் ஏற்படுத்திய சாதிப்பாகுபாடுகளில் பிராமணவகுப்பினரும், சத்திரியவகுப்பினருக்கும் ஆயுதங்களெடுத்து ஒருவரையொருவர் வெட்டிக் கொள்ளுமளவு பகைமை வளர்ந்திருக்கலாமென்பது தெரிகிறது. புராணங்களைப் பிராமணவகுப்பினர் எழுதியதால், பிராமண வீரனொருவன் வெற்றி கண்டதாக மிகைபடுத்திக் கூறியிருக்கலாம்.

பரசுராமர் அரசகுடும்பத்தினரைக் கருவறுத்தபின், கடைசியாக ரகுராமனைச் சந்திக்கிறார். அப்பொழுது பரசுராமன் தன்னிடமிருந்த வில்லைக்கொடுத்து வளைக்கச்சொல்ல, இராமன் அதைவாங்கி வளைத்து பரசுராமனின் தபோபலம் முழுவதையும் எடுத்துக் கொண்டானும்.

இராம, கிருட்டிணவதாரங்களைப்போல, திருமாலின் முழு அவதாரங்களில் ஒன்றாக பரசுராமரை வைணவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. திருமாலின் அம்சமாக இராமரும், கிருட்டிணரும் அவதரித்தார்கள். ஆனால், திருமாலின் ஆவேசம் (கோபஉணர்ச்சி) அது மட்டும் பரசுராமனாக அவதரித்தாரம். இராமன் அம்சாவதாரம்-திருமாலின் ஒரு பகுதி அவதரிப்பது. பரசுராமன் ஆவேசாவதாரம்-கோபம் ஆளாக அவதரிப்பது. அவ்வாறு பரசுராமனிடம் ஆவேசித்திருந்த சக்தி, ரகுராமனிடம் போய்விட்டதாம்.

✶

நெட்டையும் குட்டையும்

மனிதனை, உயரத்தைப் பொறுத்து பொதுவாக மதிப்பிடும்போது, நெட்டையானவன், குட்டையானவன், நடுத்தரமானவன் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஆனால் நெட்டைக்கும் குட்டைக்குந்தான் அடிக்கடி பெருமையிலேயே போட்டா போட்டி ஏற்பட்டுவிடும். நெட்டையானவன்தான் நெட்டையாக இருப்பது பெருமைக்குரிய ஒன்றாகவே எண்ணி மகிழ்ச்சி அடைவான். நடுத்தரமானவன், தான் மிக்க உயரமும் இல்லைமிக்க குள்ளமும் இல்லை என்று எண்ணி அந்த அளவில் திருப்திப்பட்டுக்கொள்வான். குட்டையானவன், தான் குட்டையாக இருப்பதால் பல வசதிகள் ஏற்படுகின்றன என்று எண்ணி மகிழ்ந்தாலும், ஒருபொழுதில்லா விட்டாலும் மற்றொரு பொழுதுதான்ஏன் சற்றுநெட்டையாக இருந்திருக்கக்கூடாது என்று எண்ணி ஏக்கங் கொள்ளாமலிருப்பதில்லை.

தமது குட்டையான உருவம், எடுப்பான தோற்றத்தைத் தருவதில்லை என்ற தாழ்வு மனப்பான்மை, பொதுவாகப் பெரும்பாலான குட்டையரின் உள்ளத்தைத் தொட்டுக் கொண்டே இருப்பது இயல்பாக இருந்து வருகிறது.

வாட்டசாட்டமாக வளர்ந்து, நிமிர்ந்த தோற்றத்தையுடைய நேட்டையர், எந்தவகை உடுப்புக்களிலே காணப்பட்டாலும் கவர்ச்சியுடையவர்களாகவே காட்சியளிப்பர். அப்படிப்பட்டவர்களின் எடுப்பான தோற்றம், மிடுக்கானநடை, அழகான அசைவுகள் யாரையும் கவர்வனவாகவே அமையும்.

பொதுவாகப் பார்க்கும்போது வாட்டசாட்டமாக வளர்ந்தவர்கள்தான், எடுத்தவுடனேயே வரவேற்கப்படுகிறார்கள்; குறைந்து மெலிந்து குள்ளமாகக்காணப்படுபவர்கள் எடுத்தவுடனேயே வரவேற்கப்பட்டு விடுவதில்லை.

பாமர உலகம் நெட்டைக்குத்தரும் அளவு மதிப்பைக் குட்டைக்குத் தருவதில்லை என்பது பொதுவாகப் பெறப்படும் உண்மையாகும்.

ஆனால் குள்ளமானவர்கள், தாங்கள் குள்ளமாக இருக்கும் காரணம் ஒன்றிற்காகவே, தங்களைத் தாழ்வானவர்களாகக் கருதிக்கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், உலகில் மிகப் புகழ்பெற்ற பெருமைக் குரியவர்களில் பெரும்பாலோர், சராசரி உயரத்தைக் காட்டிலும் மிகக் குட்டையான தோற்றம் கொண்டவர்களாகவே இருந்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

பிரெஞ்சுநாட்டு மாவீரனான நெப்போலியன் 5-அடி 1-அங்குலம் உரயமும், ரோம்நாட்டு மாவீரனான ஜூலியஸ்சீஸர் 5-அடி 2-அங்குலம் உயரமும், கிரேக்கநாட்டு மாவீரனான அலெக்சாண்டார் 5-அடி 3-அங்குலம் உயரமும் உடையவர்களாக இருந்தபோதிலும், அவர்களெல்லாம் உலகப் புகழ்பெற்ற மாபெரும் படைத்தலைவர்களாக ஆவதற்கு அவர்களது குறைந்த உயரம் தடையாக இருந்ததாகத் தெரியவில்லை.

நெப்போலியனுக்குத் தன்னை யாரேனும் குள்ளமானவன் என்று சுட்டிக் காட்டினால் அதனைக் கேட்டுக்கொண்டிருக்க மனம் பொறுக்காதாம்.

ஒருநாள் நெப்போலியன் தன் நூல்நிலையத்தில் உயரமான இடத்திலிருந்த நூல் ஒன்றை எடுக்க ஏணி கொண்டுவருமாறு பக்கத்திலிருந்த வீரர்களுக்குக் கட்டளை இட்டானாம். அவர்களில் மிக்க உயரமான ஒருவன் வந்து, "ஐயா! எனக்குத் தாங்கள் கட்டளை இட்டால் அந்த நூலை நானே எடுத்துத் தருகிறேன். தங்களைவிட நான் உயரமாக இருப்பதால் நானே அதனைக் கை நீட்டி எடுத்துவிடுவேன்" என்று கூறினானாம். உடனே நெப்போலியன் அந்தச் சொற்களைக் கேட்க மனம் பொறாதவனாய், "வீரனே! நீ என்னைவிட உயரமானவன் என்று சொல்லாதே! என்னைவிட நீட்டமானவன் என்று வேண்டுமானால் சொல்!" என்று திருத்தம் செய்தானாம்.

பெரும்பாலான குட்டையர்கள் தாங்கள் குள்ளமானவர்கள் என்று பிறர் சுட்டிக்காட்டுவதை விரும்புவதேயில்லை. சில குட்டையர்கள், உயரத்தைக் கழுத்திலிருந்து தலைவரையில்தான் அளந்து பார்க்கவேண்டுமேயொழிய, காலிலிருந்து தலைவரையில் அளந்துபார்க்க முயலக் கூடாது என்று வாதிட்டுத் தமக்கு மன அமைதி ஏற்படுத்திக் கொள்வதுண்டு.

ஒரு சமயம் எதுவார்டுபேனெஸ் என்பார் பெர்னெட் ஹார்ஷி என்ற செய்தி நிருபரைப் பார்க்கச் சென்றாராம். ஹார்ஷி பேனெஸைப் பார்த்து, "தாங்கள் கோபங்கொண்டே நான் பார்த்ததில்லையே! காரணம் என்ன!? என்று கேட்டாராம். அதற்கு பேனெஸ் "நான் குள்ளமானவன். குள்ளமானவர்கள் ஒருபோதும் கோபங்கொள்ளவே முடியாது. குள்ளமானவன் தன்னிலை மறந்து கோபங்கொண்டு உரக்கக் கத்தித், தாவிக்குதித்துக், கைகால்களை ஆட்டிக்கொண்டு சண்டைக்குக்கிளம்பினால், அது பார்ப்பதற்கு மிகவும் கேவலமாக இருக்கும். எனவே தான், நான் அந்த நிலையை ஒரு போதும் வரவழைத்துக் கொள்வதில்லை" என்று விடையிறுத்தாராம்.

உயரத்தைக் குறித்து யாரேனும் கேலி செய்தால், அவர்களுக்கு உடனே சுடச்சுட பதில் கொடுக்கவேண்டுமென்பதில் குட்டையர்களுக்குப் பொதுவாகத் துடிதுடிப்புணர்ச்சி இருப்பது வழக்கம். அலெக்சாண்டர் எச். ஸ்டீவன்சன் என்னும் அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், மிகக்குள்ளமானவராக 80 பவுண்டு எடைக்கும் குறைந்த எடையுள்ளவராக இருந்தார். ஒருபோது அவரைத் தாக்கிப் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் "நான் நினைத்தால் உம்மையே கூட விழுங்கிவிடமுடியும். இப்படிப்பட்ட ஒரு பொருள் இருப்பதை இதுவரை நான் கண்டதேயில்லை" என்று கூறினாராம். அது கேட்ட ஸ்டீவன்சன் உடனே எழுந்து, "அப்படியானால் நீர் உம்முடைய தலையைக் காட்டிலும், வயிற்றில் அல்லவா அதிகப்படியான மூளையைக் கொண்டிருக்கவேண்டி நேரிடும்" என்று விடையிறுத்தாராம். எதிர்கட்சி உறுப்பினர் தலை குனிந்தாராம்.

வெஸ்ட்மினிஸ்டர் பள்ளியின் தலைமையாசிரியராய் இருந்த டாக்டர் புஷ்பி என்பார், மிகக் குட்டையான தோற்ற முடையவர். அவர் உணவு விடுதி ஒன்றில் வழியில் நின்று கொண்டிருந்தாராம். அங்கு வந்த மிகப் பயங்கரமாக வளர்ந்த தோற்ற முடையவர் டாக்டர் புஷ்பியைக் குனிந்து பார்த்து, ஏளனக் குறிப்பில் "மிகப்பெரிய மனிதரே! நான் செல்வதற்குச் சற்று இடம் விடுகிறீர்களா?" என்று கேட்டாராம். உடனே டாக்டர் புஷ்பி "ஓ, பொடியரே! நீர் போகலாம்!" என்றாராம். உடனே அவர் தம் குற்றத்தை உணர்ந்து டாக்டரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாராம்.

உலகப் புகழ் பெற்றவர்களிலே குள்ளமான உருவம் படைத்தவர்கள் ஏராளமாக இருந்திருக்கிறார்கள். மில்டன், மைக்கேல் ஆஞ்சலோ, லாயிட் ஜியார்ஜ், லெனின், காந்தி, வால்டேர், கலீலியோ, பிளேடோ, லெய்பினிட்ஜ், மாண்டெயின், விக்தர் ஹியூகோ, ஹொரேஸ், அரிஸ்டாடில், எடிசன், ஷேக்ஸ்பியர், ஈன்ஸ்டின் போன்றோர் சராசரி உயரத்தைக் காட்டிலும் சற்று குறைவான உயரத்தைக் கொண்டவர்கள்தாம்.

இதைப்போலவே உலகப்புகழ் பெற்றவர்களில் நெட்டையராக இருப்பவரின் பட்டியலையும் காணமுடியும்.

ஆனால் இவற்றிலிருந்து ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. அதுதான், அறிவாற்றலுக்கும். உயரத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பது ஆகும். அறிவாற்றல் பெற்றவர்கள் இருசாராரிலும் இருக்கிறார்கள் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. குட்டை அழுகுக்கட்டையைக் காட்டினாலும் அறிவுக்கட்டையைக் காட்டுவதாகாது!

இலங்கையில் மன்றம் விற்பனையாளர்:

கோ. இராமசாமி

தமிழ்ப்பண்ணை

யாழ்ப்பாணம்.

இலங்கை முழுவதற்கும் முழு உரிமை பெற்றிருப்பதால் மன்றம் இதழ், மலர் தனித்தனியாகவோ, மொத்தமாகவோ பெற விரும்புபவர்கள் மேற்கண்ட முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

ஆசிரியர்.

பேராசிரியர் பெர்ட்ரண்ட் ரசல்

(சோழன்)

சென்ற இதழ்த் தொடர்ச்சி

விஞ்ஞானத்திலும் கணிதத்திலும் பேராசிரியர் ரசல் காட்டிய ஆராய்ச்சித் திறமை மதத் துறையின் பக்கம் திரும்பியது. அவரது கேள்விகள் மதத்தலைவர்களைத் திக்குமுக்காடச் செய்தன; பழங்கால நம்பிக்கைகள் கேலிக் குறியாயின. அதிலும் கிருத்துவ மதத்திலிருந்த மூடநம்பிக்கைகளும், அந்த மூடநம்பிக்கைகளைக் காப்பாற்ற கிருத்துவ குருமார்களும் போப்பாண்டவர்களும் நடத்திய கொடூரச் செயல்களும், நேர்மையை அடிப்படையாகக் கொண்ட ரசல் உள்ளத்தில் பெரும் புயலைக் கிளப்பியது. சொன்னதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் குருட்டு மனப்பான்மையை எதிர்த்து, ரசல் "எழுத்துப் போர்" தொடங்கினார் எனலாம்.

"இந்த உலகிலுள்ள சீர்கேடுகளையும் ஒன்றுக்கொன்று முரண்பாடான அமைப்புகளையும் காணும் பொழுது, ஒரு கடவுள் இந்த உலகைப் படைத்தார் என்று என்னால் எண்ணமுடியவில்லை. யாரோ ஒரு கல் நெஞ்சம் படைத்த கொடுமையாளன் மிக ஈவு இரக்கமற்ற நிலையில் இருந்தபொழுது படைத்தான் என்று வேண்டுமானால் இருக்கலாம்" என்று ரசல் ஓரிடத்தில் வேடிக்கையாகக் கூறினார்.

"கிருத்துவ மதத்தை எதிர்த்தவர் உயிருடன் எரிக்கப்பட்டார்கள், கிருத்துவமதத்தை முழுவதும் ஆதரிக்காதவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள்." கிருத்துவமதத்தின் அதிபர்களான போப்பாண்டவர்கள் ஆதிக்கம் பெற்று ஐரோப்பாகண்டத்தை ஆட்டிப்படைத்தபொழுது, "இன்கியுசிசன்" என்ற மதவிசாரணைக் கோர்ட் மூலம் பலக் கொடுமைகளைச் செய்தனர். கிருத்துவ கோட்பாடுகளை முற்றிலும் எதிர்த்தவர்கள் சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டது மட்டுமல்லாமல், கிருத்துவமதத்திற்குள்ளேயே தோன்றிய மற்ற மதப்பிரிவினர்களும் சித்ரவதை செய்யப்பட்டனர். கிருத்துவ மதத்தின் இரத்தக்கறைபடிந்த வரலாறு ரசலின் உள்ளத்தைக் குலுக்கியது. அன்பு, அறம், கருணை இவைகளை அடிப்படையாக்க கொண்ட போதிலும் மதங்கள் எந்த இடத்தில் தவறுகின்றன வென்று ரசல் தெள்ளத்தெளிய விளக்கினார்: "கிருத்துவின் பத்து கோட்பாடுகள் மிக நன்றாயிருக்கின்றன. ஆனால் மனித உள்ளத்திலும் வரலாற்றிலும் அவைகளினால் ஏற்பட்ட விளைவு வேறாக உள்ளது. கிருத்துவைப் பின்பற்றியவர்கள், எதிரியை நேசித்தார்கள் என்றோ, ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தைக் காட்டினார்கள் என்றோ கூறமுடியாது. அதற்குப் பதிலாக, சித்திரவதை நிறைந்த இன்கியுசிசனையும், நெருப்புக்குண்டத்தில் மனிதனைப்போட்டு எரிப்பதையும் அவர்கள் கற்றுக்கொண்டார்கள், மனிதனுடைய அறிவை மதக்குருமார்களின் எதேச்சாதிகாரத்துக்கும் அறியாமையிருளுக்கும் அடிமைப்படுத்தினார்கள், கலையுணர்வை மூடநம்பிக்கைக்குத் தாழ்த்தினார்கள், விஞ்ஞான வளர்ச்சியை ஆயிரமாண்டுகளாக சிதைக்க முயன்றார்கள். இவைகளெல்லாம் தடுக்க முடியாத விளைவுகள், குற்றம் அவர்கள் மேற்கொண்ட கோட்பாடுகளில் இல்லை. அந்த கோட்பாடுகளை அப்படியே ஏற்றுக்கொண்டு காப்பாற்றும் மூர்க்கத்தனமான நம்பிக்கையில் தான் குற்றம் ஆரம்பிக்கிறது."

மூர்க்கத்தனமான நம்பிக்கை அதுதான் ஒவ்வொரு மதத்தின், அடிப்படையாக இருக்கிறது. "ஆண்டவன் அருளியது" "வேதத்தில் சொல்லப்பட்டது" என்று கூறப்பட்டு விட்டால், ஒவ்வொரு மத பக்தனும், ஆராய்ந்து பார்க்காமல் அதை ஏற்றுக் கொள்ளுகிறான். இவ்வாறு ஆராய்ந்து பார்க்க வொட்டாமல், மூர்க்கத்தனமான நம்பிக்கை, விஞ்ஞான மனப்பான்மைக்கு முற்றிலும் மாறுபட்டது.

மூர்க்கத்தனமான நம்பிக்கை இதைவிட வேறு உண்மை எதுவும் கிடையாது என்ற முடிவான நம்பிக்கை ஆராய்ச்சியைத் தடுப்பதுடன் ஆராய்ச்சி செய்பவர்களை அழிக்க முன் வருகிறது. இதனால்தான், அன்பு அறம் இவைகளை ஒருபுறம் உச்சரித்தபோதிலும், மறுபக்கம் விஞ்ஞானிகளை தீயில் போட்டும், சிறையில் தள்ளியும், கைகளை வெட்டியும், கண்ணை அவித்தும் சித்ரவதை செய்ய கிருத்துவ மதக்குருமார்கள் தயங்கவில்லை. கிருத்துவ மதத்தின் கறைபடிந்த வரலாறுகள் ரசலின் மதநம்பிக்கையை அகற்றின. "நான் ஏன் கிருஸ்தவனல்ல" என்ற நூலில், கிருத்துவ

மதத்தில் தான் நம்பிக்கையிழந்ததற்கான காரணத்தை ரசல் விளக்கினார். அந்நூல் வெளிவந்ததும் கிருத்துவ நம்பிக்கையாளரின் எதிர்ப்பு ரசலைச் சூழ்ந்தது. அவர் சொல்லிய காரணங்கள் குறிப்பிட்ட ஒரு மதத்துக்குமட்டுமல்ல, பொதுவாக எல்லா மதங்களுக்கும் முக்கிய எச்சரிக்கையாக அமைந்தது.

மதங்களைப்பற்றி ரசல் ஆராய்ந்தபொழுது, மதங்களின் அடிப்படையில் இருக்கும் ஒரு முக்கிய இயல்பை அவர்கண்டார். அதுதான் மறைபொருள்வாதம் ஒன்றை மற்றொன்றாகச் சொல்ல, அதைவேறொன்றாக விளக்கி, குழப்பத்தில் கொண்டுபோய்விடும் வாதங்களை அவர் கண்டித்தார். கணிதத்திலும் விஞ்ஞானத்திலும் ஊறிய அவன் மனம், தர்க்கவயப்பட்ட நேர்மையை அவர் ஆதரித்தார்.

“மறைபொருளும், தர்க்கமும்” “மதமும், விஞ்ஞானமும்” ஆகிய அவரது உயர்ந்த நூல்கள் பகுத்தறிவுப் பான்மையை வளர்க்கப் பெரிதும் உதவின. உலகப் பகுத்தறிவு வாதிகளின் வரிசையில் ரசல் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றார்.

விஞ்ஞானத்தையும் பகுத்தறிவையும் பற்றிய ஆராய்ச்சிக்கட்டுரைகளில் ஈடுபட்டிருக்கும் பொழுதுதான், முதல் உலகயுத்தம் குறுக்கிட்டு, அவரது போராட்டத்தை வேறுபக்கம் திருப்பியது. “போர் தவிர்க்கப்படவேண்டும்” என அவர் பிரசாரம் செய்தபொழுது, தமக்கே உரித்தான ஆராய்ச்சித்திறனை, போர், வல்லரசுகள், அரசியல், பொருளாதாரம் இவைகளின்மீது ரசல் திருப்பினார். பொருளாதாரச் சீர் கேடுகளை ஆராயும் பொழுது, தனிப்பட்டச் சொத்துகளின் வரலாறுகளை அவர் கண்டறிந்தார். அடக்குமுறையாலோ, அநியாயத்தாலோ, தனிப்பட்ட சொத்து கைமாறுகிறது. வைரச்சுரங்கங்களும், தங்கச் சுரங்கங்களும் திருட்டுத்தனத்தால் தனிப்பட்டவர்கள் சொத்தாகிவிடுகிறது. தனிப்பட்ட சொத்துரிமை நிலைப்பதால், சமுகத்துக்கு நன்மை ஏற்படவில்லை என்பதை அவர் கண்டார். சமுகத்தில் நீதியும், நிலையான அமைதியும் நீடிக்க வேண்டுமென்றால் தனிப்பட்ட சொத்துரிமை மாறி, சமதர்மம் தழைக்கவேண்டும் என்று ரசல் கருதினார் சமதர்மத்தில் ஏற்பட்ட பற்றுதல், அப்பொழுது ருஷியாவில் மலர்ந்த பொதுவுடமையாளர்களின் ஆட்சிமுறையைக் காணவேண்டுமென்ற ஆவலைஉண்டாக்கியது. 1917ல் ருஷியாவில் புரட்சி மூண்டு லெனின் தலைமையில் பொதுவுடமையாளர்கள் ஆட்சியைக் கைப்பற்றியதும், உலகத்தின் கவனம் ருஷியா பக்கம் திரும்பியது. உலகச் சமதர்மவாதிகளின் ஆர்வம் ருஷியாவுக்கு உதவியாக இருந்தது. புதிய உலகை சமதர்மத்தை அடிப்படையாகக்கொண்ட புதிய சமுதாயத்தை ருஷியப் பொதுவுடைமையாளர்கள் உண்டாக்குகிறார்கள் என்ற நல்ல நம்பிக்கை உலகில் பல்வேறு பகுதிகளில் போராடும் சமதர்மவாதிகளுக்கும் தொழிலாளர் தலைவர்களுக்கும் உண்டானது. ருஷியாவில் ஏற்பட்டுள்ள புரட்சி நிலையையும், பொதுவுடமை நோக்கத்தையும் நேரில் காணவேண்டுமென்ற ஆர்வத்தில் பிரிட்டிஷ் தொழிற்கட்சி ஒரு தூதுக்குழுவை அனுப்பிவைத்தது. பேராசிரியர் ரசல், அந்த தூதுக்குழுவுடன் சேர்ந்து ருஷியாவுக்கு 1920 மே மாதம் சென்றார். புதிய சமுதாயம் மலருவதை காணச் சென்ற ரசலுக்குச் அங்கு காணப்பட்ட திடுக்கிடக்கத்தக்க பொதுடமை முறைகள் புதிய கேள்விகளை உண்டாக்கின. அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, சமதர்ம அடிப்படைக் கொள்கைச் சிறந்தது என்றபோதிலும், ருஷியப் பொதுவுடமை வாதிகள் கையாண்ட முறைகள் சரியானவைகளாக அவருக்குப் படவில்லை. “போல்சிவிசம்” என்று கூறப்பட்ட ருஷியப் பொதுவுடமைக் கொள்கையை அவர் ஆராய்ந்து, இங்கிலாந்து திரும்பியதும் “போல்சிவிசம் கொள்கையும் நடைமுறையும்” என்ற நூலை எழுதினார். பொதுவுடமை பற்றிய இந்த ஆராய்ச்சி நூல், 1920 செப்டம்பர் வெளியிடப்பட்டது.

மிக ஆரம்பகாலத்திலேயே, ருஷியப்பொதுவுடமை வாதிகள் கையாளும் முறைகள் சரியானவையல்ல என்று ரசல் கண்டார். அத்துடன் அவர்களின் கோட்பாடுகளும், கொள்கைகளும், கண்மூடித்தனமான முறையில் வளருமென்றும் அவர் கூறினார்; அந்த நூலின் முன்னுரையில் ரசல் பின்வருமாறு எழுதினார். “ருஷிய பொதுவுடைமை வாதிகளிடமிருந்து, அடிப்டையான விதத்தில் நான் மாறுபடுகிறேன். பொதுவுடைமை அவர்களுக்கும் அரசியல் கொள்கையாக நிற்கவில்லை. வேதவாக்குகளும் கோட்பாடுகளும் நிறைந்த மதமாக அமைந்துவிட்டது! லெனின் போன்றவர்கள் கூட ஏதாவது ஒன்றை விளக்க விரும்பினால், மார்க்ஸ்-ஏங்கெல்ஸ் இவர்கள் எழுதியவற்றில் சில வரிகளை ஒப்பிக்கத் தவறுவதில்லை. மூலதனமும் நிலமும் பொதுவாக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தை மட்டும் ஒப்புக்கொள்கிறவன் முழு பொதுவுடைமை வாதியாகி விடுவதில்லை. மிக விரிவான—முடிவான கோட்பாடுகளையும், விதி

களையும் அப்படியே ஏற்றுக்கொள்பவனுகவும் அவன் இருக்கவேண்டும். அந்தக் கொள்கை கள் உண்மையானதாக இருக்கலாம், ஆனால் விஞ்ஞானத்தில் இருப்பதைப் போன்ற ஆராய்ச்சி இல்லாத முறையில் கொள்கைகளை ஏற்றுகொள்ள வேண்டும். முடிந்த முடிவு களை ஏற்றுக்கொள்வதை விட்டு, ஆராய்ந்து பார்க்கும் திறனை வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலத்துக்குப்பின் வளர்ந்தது. அது விஞ் ஞான மனப்பாங்காகச் சிறப்பட்டது. இந்த விஞ் ஞானப் பண்பாடு மனிதகுலத்தின் பெறற் கரிய பேறு என்று நான் நினைக்கிறேன். பொருளாதார அமைப்பை சீர்படுத்துவதற்கு மக்களின் ஆராய்ச்சி மனப்பான்மை அடக்கப் பட்டு அறிவொளி இருட்சிறையில் மறைக்கப் பட வேண்டும் என்று கூறப்படுமேயானுல், நாம் கொடுக்கும் விலை அதிகம் என்று நான் கூறுவேன்.

1920ல் ருஷியாவில் பொதுவுடைமை, ஆட்சி ஆரம்பநிலையில் இருந்தது அப்பொழுது முக் கிய தலைவர்களாக இருந்த லெனின், டிராஸ்கி கார்க்கி முதலியவர்களை ரசல் நேரில்கண்டு பேசினர். அப்பொழுது ஸ்டாலின் அதிகமாக அறிமுகமாக நிலை. ஆனால் ருஷியாவில் இருந்த சூழ்நிலையில் ரசல் சொன்னவைகள் பல பின்பு மெய்பிக்கப்பட்டன. 1920ம் ஆண்டி லேயே, "கொள்கைகள் மறைக்கப்பட்டு, நெப் போலியன் செலுத்திய ஏகாதிபத்திய ஆட்சி முறை நிறுவப்படலாம்" என்று ரசல் முன் கூட்டி அறிவித்தார். பொதுவுடைமையின் பரந்த ஆட்சியிலும் போகப்போக "நாட்டுப் பற்று" தலை தூக்கி மோதுதல்கல் ஏற்படக் கூடும் என்றும் அவர் அன்று கூறினர்!

ருஷியப் பொதுவுடைமையில் உள்ள குற்றங் குறைகளை அவர் கூறியபொழுது, முதலாலித் தனத்துக்காக அவர் பேசினர் என்று சொல்லமுடியாது. முதலாளித்துவ முறை அழிக்கப்படவேண்டியது, என்று கொள் கையை வலியுறுத்தியபின்தான் ரசல் ருஷியா வில் காணப்பட்ட "அழிவு, குழப்ப அறிகுறி களை" எழுதினர். 1920ல் எழுதப்பட்ட அவ ருடைய நூல், 1948ல் மீண்டும் பதிக்கப்பட் டது, "சமதர்மம்" "பொதுவுடைமை" இவை கள் வழக்கத்தில் பெற்றுள்ள வேறுபாட்டை ஒட்டி, அந்தச் சொற்களை ஆங்காங்கு திருத் தியதல்லாமல், 1948ல் வெளியிடப்பட்ட இரண்டாம் பதிப்பில் அவர் எழுதியவற்றில் ஒரு வாக்கியம்கூட மாற்றுமல் பதிக்கப்பட்ட தாம்!

ருஷியாவிலிருந்து இங்கிலாந்துக்குத் திரும்பி, பொதுவுடைமைபற்றிய நூலை வெளி யிட்டதும், ரசலின் கவனம் இன்னும் தூக் கிழக்குச் சென்றது. ரசல் சீன நாட்டுக்குச் சென்ருர்.

பீகிங் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக ரசல் பணியாற்றினர். அமெரிக்கா, இங்கி லாந்து, ருஷியா இந்தச்சச்சரவுக்கப்பால், இன் னும் விழித்து எழாமல் இருக்கும் கிழக்குநாடு கள் அவரது கருத்தைக் கவர்ந்தன. 'பெரும சண்டைகளில் ஐரோப்பா அழிந்தாலும், கிழக்கு நாடுகள் உலகின் நாகரிகத்தைக் காப் பாற்றிச் செல்லும்" என்று அவர் நினைத்தார். அத்துடன் அறியாமை இருள்மிகுந்த நாட் டில் அறிவொளி பரப்பும் வேலை அவருக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது. ஆனல் உற்சாகத்தின் அளவு அவரது உடல் வலிவு தாங்கவில்லை. நிமோனியா காய்ச்சலில் ரசல் படுத்த படுக்கையானுர்.

மிகக் கடுமையான காய்ச்சல்! ரசல் உடல் நிலை மிகப் பலவீனமடைந்தது. மருந்துகள் எதுவும் பலனளிக்கவில்லை.

"ரசலுக்கு நிமோனியா காய்ச்சல்! மிகக் வேலைக்கிடமான நிலை!" என்று லண்டன் பத் திரிக்கைகளில் செய்திவந்தது. ரசலின நண் பர்கள் மிகவும் கலங்கிப்போனுர்கள். மேற் கொண்டுவந்த செய்திகள் நம்பிக்கையூட்டு வதாக இல்லை.

இந்த நிலையில் "ரசல் இறந்துவிட்டார்" என்று ஐயப்பன் பத்திரிகைகள் கொட்டை யெழுத்தில் கருப்புக்கோடு போட்டு அறிவித் தன!

ரசலிடம் மதிப்புகொண்ட சீனுக்காரர் ஒரு வர், ரசலின் பிணத்தைப் புதைப்பதற்கு ஏரிக் கரையில் ஒரு நல்ல இடத்தை வாங்கித் தயா ராக வைத்துவிட்டார்!

பத்திரிக்கைச் செய்திகளை பார்த்ததும் ரச லின் நண்பர்கள் பதைத்தார்கள், கலங்கிய கண்களுடன் பல்கலைக்கழகத்துக்கு விவரங் கேட்டு, செய்தியனுப்பினுர்கள்! ரசலுடன் பணியாற்றிய ஆசிரியர்கள் ரசலின் விடுதிக்கு விரைந்தார்கள்!

ரசலின் உயிர் இன்னும் பிரியவில்லை! மர ணத்தைச் சந்திக்கும் நிலைதான், இன்னும் வாழ்வு சிறிது ஒட்டிக்கொண்டிருந்தது! மிக மங்கிய ஒளி, ஆனல் இன்னும் அணைந்துவிட வில்லை!

மரணவாயலில் மூன்று வாரங்களாக ரசல் போராடினர்; அவரைக் கண்காணித்த டாக் டர்கள்-செர்மனிநாட்டைச் சேர்ந்தவர்கள். ரச

ப்போல் சிறைவுக்குப் பணியாற்ற வந்த டாக் ர்கள்—அவர்கள்: ரசலிடம் மரணத்தை நருங்கவிடாமல் போராடினார்கள். கடைசி க வெற்றிப் பெற்றார்கள். பத்திரிகைக் ரார்களால் "சாகடிக்கப்பட்டு", சின நண்ப ால் புதைக்கப்பட த் தயாராக்கப்பட்ட, ரசல் யிர் பிழைத்தார்!

உடல் நிலை சற்று இடங்கொடுத்ததும், ரசல் இங்கிலாந்து திரும்பினார். பின், தோரா பிளாக் ன்ற பெண்ணை மணந்து, செல்சி என்ற இடத் தில் ஒரு சிறிய வீட்டில் வாழத் தொடங்கினார். ரபு வமிசத்தைச் சார்ந்திருந்தும், அதனால் லன்பெற விருப்பமின்றி சொற்பொழிவாற்று தன்மூலமும், நூல்கள் எழுதுவதன்மூலமும் டைக்கும் பணத்தை வைத்து அவர் ாழ்க்கை நடத்தினார்.

1922ல் நடந்த தேர்தலில் பேராசிரியர் ரசல் தொழிற்கட்சி சார்பாக நின்றார், தோல்வியுற் ார்! அடுத்த ஆண்டு தேர்தல்கள் மீண்டும் வந்தபொழுது, மீண்டும் ரசல் தொழிற்கட்சி சார்பில் தேர்தலில் நின்றார், தோல்வியுற்றார்! 1924ம் ஆண்டு தேர்தல் வந்தது இந்தத் தடவை ரசலின் மனைவி தேர்தலில் நின்றார் கள், தோல்வியுற்றார்கள்! தோல்வியடைந்த சலைப்பற்றி இங்கிலாந்தும் உலகமும் தெரிந் திருந்த அளவு வெற்றியடைந்த பிரதிநிதி யைப்பற்றித் தெரியாது.

உயர்தர விஞ்ஞானத்தை மக்களுக்கெல்லாம் புரியும்படியான அளவுக்கு ஆக்கவேண்டும் என்ற எண்ணத்தில், பேராசிரியர் ரசல் அணுக்கள்பற்றியும், ரிலேடிவிடி தத்துவம்பற் றியும் எளிதான நூல்கள் எழுதினார். அவை 1923ல் 1925ல் வெளியிடப்பட்டன. 1926ல் அவர் எழுதிய "கல்வி முறை" என்ற நூல் வெளிவந்தது. 1927ல் "பொருள் ஆராய்ச்சி", 1928ல் "தத்துவங்களின் சுருக்கம்" என்ற தத்துவ நூல்கள் வெளிவந்தன. தொடர்ந்து அவருடைய அறிவியல் கட்டுரைகளும், நூல் களும் பல வெளிவந்தன.

பேராசிரியர் ரசல் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களால் அடிக்கடி அழைக்கப்பட்டார். 1924லிருந்து ஆண்டு தோறும் அவரது சொற்பொழிவுகள் விரும்பிக் கேட்கப்பட்டன. 1938லிருந்து 1944வரை அவர் அமெரிக் காவில் தங்க நேரிட்டது. பல்கலைக் கழகங் களில் சொற்பொழிவாற்றுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் அவருக்குப் போது மானதாகயிருந்தது. அமெரிக்காவில் இருந்த போதிலும், அமெரிக்க முதலாளித்துவ முறைக்கு அவர் ஆதரவு தரவில்லை. அமெரிக்க முதலாளிகளும் அவருக்குப் பரிவு காட்டவில்லை. சிறந்த அறிஞர் என்ற காரணத்தால் ரசல் சகித்துக்கொள்ளப்பட வேண்டியவரானார்.

1946ல் "மேல்நாட்டுத் தத்துவங்களின் வரலாறு" என்ற உயர்தர நூலை ரசல் எழுதி முடித்தார். கிரேக்க காலத்திலிருந்து தற் காலம் வரை வளர்ந்துள்ள தத்துவங்களில் முக்கியமானவைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் நூல் அது.

1948ல் "அதிகாரமும், தனிப்பட்டவர் களும்" என்ற ரசலின் நூல் வெளிவந்தது.

ரசல் இதுவரை எழுதியுள்ளவைகளில் மிக முக்கியமானவைகளாக 25 நூல்கள் இப் பொழுது உள்ளன.

1950ல் பேராசிரியர் ரசலுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. தத்துவஞானியாக விளங் கும் அவருக்கு இலக்கியத்தில் நோபல் பரிசு தரப்பட்டது—அவர் எழுதியுள்ள நூல்கள் இலக்கியச் செல்வங்களாகக் கருதப்பட்ட காரணத்தால்.

ரசலுக்கு தற்பொழுது வயது 85! அவரு டைய உடல் நலம் எப்பொழுதும் நல்ல நிலை மையில் இருந்ததில்லை. 1920ல், இறந்துபோய் விடக்கூடும் இறந்துபோய்விட்டார் என்று கருதப்பட்டவர், தப்பிப்பிழைத்து இவ்வளவு காலம் வாழ்வைக் கடத்தியதே பெரும் செயல்! முதிர்ந்த இந்த வயதிலும், உடல் நிலை தளர்ந் துள்ளதென்றாலும், உலக நிலையைப் பற்றி அவர் கவலைப்படாமல் இருப்பதில்லை. அமெ ரிக்காவில் உள்ள கல்வி முறையிலிருந்து, எகிப்து நாட்டுப்போர்வரை: அநீதி எங்கு நேர்ந்தாலும், அமெரிக்காசெய்தாலும் தனது தாய்நாடு செய்தாலும், எப்பக்கத்திலும் சாராது, நீதி ஒன்றைமட்டும் சார்ந்து தனது எதிர்ப்பைத் தெரிவித்திட பேராசிரியர் ரசல் தயங்குவதில்லை.

உலகப் பகுத்தறிவாளர்கள் அமைப்புத் தலைவராக பெர்ட்ரண்ட் ரசல் உள்ளார். அறி வொளி பரப்பிட வேண்டுமென்று அவருக் குள்ள ஆர்வம், அண்மையில் பம்பாயில் கூட விருக்கும் இந்தியப் பகுத்தறிவாளர் மாநாட் டுக்கு அவர் அனுப்பியுள்ள செய்தியில் நன்கு வெளிப்படுகிறது. 22-11-56ல் அவர் எழுதிய கடிதத்தின் இறுதியில் "உலகைப் பேரழி வுக்கு ஆளாக்கும் வகையில் மூர்க்கத்தனமான சக்திகள் இன்று எழுந்துள்ளன; அவைகளை எதிர்த்து நிற்க மனிதகுல வரலாற்றில் இதற்குமுன் என்றுமில்லாதவாறு பகுத்

தறிவு மனப்போக்குத் தேவைப்படுகிறது.'' என்று கூறியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் முதற் பகுதியில், விஞ்ஞான மனப்பான்மை வளர்வதற்குப் பெரிதும் பாடுபட்டவர் ரசல் ஆவார்! அவர் விரும்பியிருந்தால், ''பிரபுரசலாக'' வாழ்ந்திருக் கமுடியும். பிரபு ரசல் என்பதைவிடப் ''பேரா சிரியர் ரசலாக''-இனனும் பார்க்கப்போனல் வெறும் ''பெர்ட்ரண்ட் ரசலாக'' வாழ்கிறர்.

அறிவுத்துறையின் உயர்ந்த பகுதியில் நின்று ஆராய்ச்சிகள் பல செய்து பேரறிவாள ராக விளங்கியபொழுதும், சாதாரண மக்களுக் குப் புரியும்படியான எளிய நடையில் சமுகத் தைப்பற்றி ரசல் எழுதினர். மனித வரலாற் றில்தலைசிறந்த தத்துவஞானி-அறிவியல்அறி ஞர்கள் வரிசையில் பெர்ட்ரண்ட் ரசல் இடம் பெறுகின்றர், அதேசமயத்தில் மனிதாபிமான மிக்க சான்றேர் வரிசையிலும் பெர்ட்ரண்ட் ரசல் இடம் பெறுகிறர். அறிவியல் ஆராய்ச்சி, தத்துவஞானம், கணித வாய்பாடுகள், தர்க்க முறை-இவைகள் அவரது வாழ்க்கை யின் மற்ற பகுதிகளை வரண்டதாக்க வில்லை, உழைப்பாளரிடம், தொழிலாளரிடம், உண்மை நாடுவோரிடம், மனிதனிடம் - அவருடைய அன்பு குறைவில்லை. அறிவால் நிறைந்தவர் ரசல், அதேசமயம் மனிதகுலத்திடம் அன் பால் நிறைந்தவர் ரசல்! மூளை மட்டுமல்ல, இருதயமும் நிறைவாக இருக்கும்பேராசிரியர் உலகத்தின் சான்றேன் பெர்ட்ரண்ட் ரசல் ஆவார்!

வளர்க அவர்தம் வாழ்வு! வாழ்க அவர் தம் வளர்ச்சி!

தேர்தல் நிதி தாரீர்!

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே! பொதுத் தேர்தல் நெருங்குகிறது. மிக விரைவாக நெருங்கிக்கொண்டிருக்கிறது! பொதுத்தேர்தலில் ஈடு படுதலாகிய மக்களாட்சி முறைமையைத் தூய உள்ளத்தோடும், நேரிய செயல்முறை யோடும் நிறைவேற்றுவதென்று திராவிட முன்னேற்றக்கழகம் முடிவு செய்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள்! அடுத்துவரும் பொதுத்தேர்தலில், 150 தொகுதிகளில் தி. மு. கழகம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறதென்று, நாடெங்கும சுற்றி விவரம் அறிந்துவந்துள்ள தேர்தல் ஆய்வுக்குழு சுவையான செய்தியைத் தந்துள்ளது. இந்தச் சுவையான செய்தியைச் செயலாக்கிக் காட்ட, இலட்சக்கணக்கிலே பொருள்தேவைப்படு கிறது. கழகத்தோழர்கள் தேர்தல் களத்திலே வீறுநடைபோட்டு வெற்றி உலா வர வேண்டுமானல், தொகுதிதோறும் செய்யப்படவேண்டிய அடிப்படை நியாயமான செலவு களுக்கே ஆயிரக்கணக்கில் ஆகும்.

எனவேதான், இச்சூழ்நிலையை ஆராய்ந்தறிந்த மந்திய செயற்குழு, தேர்தல் பணியை நிறைவேற்ற, குறைந்த அளவு ரூபாய் ஐந்து இலட்சம் தேவையென்று மதிப்பிட்டது.

சிறுதுளி பெறுவெள்ளம்!

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பெருமுயற்சி எடுத்து, கைநிறைய காசு களை அள்ளியள்ளி வழங்குவார்களேயானல், கழகம் எதிர்பார்க்கும் ரூபாய் ஐந்து இலட் சம் விரைவிலே சேர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

கிளைக்கழகங்கள், ஆங்காங்கு முறைப்படி முயற்சி எடுத்து நிதி திரட்டி, திரட்டி டும் தொகையைச் சேரச்சேர அவ்வப்போது நேரே தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

மாவட்டச் செயலாளர்கள், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களை அவ்வப்போது தூண்டி, நிதி சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் பணியில் துணைபுரியு மாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

தனி அமைப்புகளும், தனிப்பட்ட தோழர்களும் தனித்தனியாகத் தலைமைக் கழகத் திற்கு அனுப்பிவைக்கும் தேர்தல்நிதியும் நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

தேர்தல் நெருங்குகிறது! பொறுப்பு மிகுகிறது! கடமையை விரைந்து செய்ய வாரீர்! வாரீர்!!

வணக்கம்

இரா. நெடுஞ்செழியன்,

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்.

குறிப்பு :—நிதி அனுப்பிவைக்கவேண்டிய முகவரி :—

பொதுச்செயலாளர்—தி. மு. கழகம் 'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

திருக்குறளின் மேன்மை

[ஊரப்பன்]

உலகத்தில் பல இலக்கியங்கள் தோன்றுவதை நாம் நம் கண்ணெதிரே பார்க்கிறோம். ஒவ்வொரு இலக்கியமும் சிற்சில சிறந்த கருத்துக்களைப் பெற்றிருக்கின்றன. ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள் அவரின் திறமையையும் ஆற்றலையும் தெரிவிக்கின்றன. மில்டன் எழுதிய இலக்கியம் அவரின் அறிவை விளக்குகின்றது. இவ்வாறு நாம் எந்த இலக்கியத்தை எடுத்துக்கொண்டாலும் ஒவ்வொரு இலக்கியத்தலைவரும் ஒவ்வொரு வகையில் திறமை பெற்றுள்ளனர். இளங்கோவின் சிலப்பதிகாரம் அவரின் முத்தமிழ்ப் புலமையை விளக்குகின்றது. முத்தமிழிலும் திறமை பெற்றுள்ளார் என்பதை நாம் முறையே காண்கிறோம். இப்போது நாம் திருக்குறளைப் பற்றி ஆராய்வோம்.

திருக்குறளுக்கும் மற்ற இலக்கியத்திற்குமுள்ள வேறுபாடு.

உலகத்தில் தோன்றுகிற பல இலக்கியங்களிலுள்ள கருத்துக்கள எழுதிய காலத்தில் மட்டுமின்றி ஏனைய காலங்களில் அதாவது சில நூற்றாண்டுகள் கழித்து அவை போற்றப்படுமா--போற்றப்பட்டனவா–போற்றப்படுகின்றனவா என்பது ஐயத்திற்குரிய செய்தி. எத்துணையோ அரசியலறிஞர்கள் அரசியலில் கைக் கொள்ளவேண்டியவைகளைப் பற்றிப் பல கொள்கைகளைக் கூறினர். ஆனால் அக்கொள்கைகள் எல்லாம் அவை தோன்றியது முதல் இன்று வரை உள்ள காலத்திற்குப் பொருந்தியது கிடையா. ஒரு காலத்தில் ஒரு அரசியல் வாதி நாட்டில் சர்வாதிகாரம் என்ற கொள்கைதான் சிறந்தது என்று கூறினான் என்று வைத்துக்கொள்வோம். அக்கொள்கை சில காலம் நடைமுறையிலிருக்கின்றது. சில்லாண்டுகள் கழிகின்றன, பிறகு அரசியலின் சூழ்நிலை சிறிது சிறிதாக மாறுகிறது. பிறிதொரு அரசியல் வாதி நாட்டில் மக்களாட்சி தான் சிறந்தது என்று கூற ஆரம்பிக்கிறான். நாள் ஆக ஆக சர்வாதிகாரக் கொள்கை விழுகின்றது. மக்களாட்சிக்கொள்கையின் மீது மக்களுக்குப் பற்று ஏற்படுகின்றது. இவ்வாறு சிலரால் கூறப்பட்ட கருத்துக்கள் சில காலமிருந்து பிறகு அவை வீழ்வது நமக்குப் புலனாகிறது. ஆனால் திருக்குறளை எடுத்துக் கொண்டால் அவ்வாறு வீழ்படுகின்ற கருத்துக்களைப் பெரும்பாலும் காணமுடியாதென்பதாம். இரண்டாயிரமாண்டுகளுக்கு முன் கூறிய கருத்துக்களனைத்தும் இன்றும் மக்கள் வாழ்க்கைக்குப் பொருந்துவதாகவே உள்ளன. இதுபோன்று நாம் எல்லா இலக்கியத்திலும் காணுதலரிது. இது மற்ற இலக்கியத்திற்கும் திருக்குறளுக்குமுள்ள வேறுபாடுகளுள் ஒன்றெனலாம். இவண் திருக்குறளின் தனிச் சிறப்பும் திருவள்ளுவரின் அறிவும் தெற்றென விளங்குகிறது.

தமிழர்களின் கருவூலம்: தமிழர்களுக்குத் திருக்குறள் சிறந்த கருவூலமாகும். அதில் வாழ்க்கைக் கேற்ற அத்துணைப் பொருள்களையும் தெளிவாகக் கூறியுள்ளார். அவர் தனி மனிதனின் வாழ்க்கையை மட்டும் விளக்கவில்லை. அரசியல் நிலைமையையும் ஆராய்ந்துள்ளார். தமிழர்களின் கொள்கைகளை வெளிநாட்டார் அறிந்து கொள்ள விரும்பினால், அவர்கள் திருக்குறள் என்ற ஒரு இலக்கியத்தைப் படித்தாலே சாலுமென்பதாம். திருக்குறள் தமிழிலிருப்பது பற்றித் தமிழர்கள் பெருமை கொள்ளலாம். அது மக்களின் வாழ்க்கையைச் சித்தரிப்பதால் அதை "மக்கள் இலக்கியம்' என்றே கூறலாம். இலக்கியங்கள் யாவற்றிலும் மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இலக்கியம் தான் சிறந்தது.

நூலின் நோக்கம். பொதுவாக உலகத்தில் பிறந்த மனிதனின் நோக்கம் என்னவென்பதைப் பற்றிச் சிந்திப்போம். மனிதன் உலகத்தில் பிறந்ததன் நோக்கம் வள்ளுவர் கூறுவது போல் "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" என்பதற்கிணங்க, புகழொடு வாழ வேண்டுமென்பதாம். மனிதன் முதன் முதலில் தன்னுடைய வாழ்க்கையைச் சிறந்த முறையில் அமைத்துக்கொண்டு பிறகு நாட்டிலுள்ள மக்களுக்குத் தன்னாலியன்ற உதவியை-தொண்டைச் செய்யவேண்டுமென்பதாம். ஆனால் தற்காலத்தில் தொண்டு செய்ய முடியாது என்று

எண்ணியோ அல்லது என்ன வெண்ணியோ தொண்டு செய்ய முடியாத நிலையில் பிறருக்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்து விடுகின்றனர். கொடுக்கவும் கொடுக்கின்றனர். அது-அவ்வாறு தொல்லை கொடுப்பது தமிழர் கொள்கைக்குப் புறம்பானது உதாரணமாக: நாம் புறநானூற்றில் ஒரு புலவர் கூறுவதை இவண் நோக்குதல் நலம். அவர்கூறுகின்றார், நல்ல செயல்கள் செய்யமுடியவில்லை என்றாலும்-சிறந்த, செயல்கள் ஆற்ற உங்களால் இயலவில்லை என்றாலும் தீய காரியங்களை மட்டும் செய்யாதிருங்கள். அது தான் உலகத்தினுள்ள அறிஞரால் போற்றப்படுவது. அது தான் எல்லோராலும் வரவேற்று மகிழ்ச்சியளிப்பது. அதுதான் புகழைப் பெறுவதற்கு வழி என்று அறவுரை கூறுகின்றார். "நல்லது செய்த லாற்றீராயினும் அல்லது செய்தலோம்புமின் அதுதான் எல்லோரானு முவப்பதன்றி நல்லாற்றுப்படூஉம் நெறியுமாராதுவே" (புறம்) எனவே மனிதன் பிறருக்கு உதவிசெய்யக் கூடிய நிலையில்லாதபோது துன்பம் செய்ய நெஞ்சின் கண்ணும் எண்ணக் கூடாதென்பதாம். இவ்வாறு உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் இக்கொள்கையைப் பின் பற்றுதல் வேண்டுமென்பதாம்.

ஒரு மனிதன் பிறருக்கு உதவி செய்ய முடியாத போழ்து துயர் ஏன் கொடுக்கின்றான்? துயர் கொடுக்கவேண்டுமென்று ஏன் அவன் மனமெண்ணுகிறது? பொறாமை, போன்ற குணங்கள் அவன் மனதின் கண் குடி கொண்டிருந்தால் அவன் பிறருக்குத் துயர் கொடுக்க வேண்டுமென்றுதான் எண்ணுவான். அவன் பிறருக்கு இடர் விளைக்காதிருக்க வேண்டுமென்றால் அவன் நெஞ்சு பண்படவேண்டும். அவன் நெஞ்சில் ஈரம் குடிகொள்ளவேண்டும். அவன் மனதில் பொறாமைக் குணம் இருக்கும்போது அந்தத் தீய சக்தி அவனுடன் வெற்றி காணப் போராட முயல்கிறது. இவனும் அதனுடன் போராட விரும்புகிறான். இவ்வாறு உலகத்தில் தோன்றிய மனிதன் எத்துணையோ போராட்டங்களை வென்று வெற்றி காண வேண்டியவனாயிருக்கின்றான். அவ்வாறு நிகழும் பிற போராட்டங்கள் எவை? அவைகளை மனிதன் வென்று வெற்றி காண வழிவகைகள் யாவை? என்ற கேள்விகளுக்கெல்லாம் விளக்கம் திருவள்ளுவர் அருமையாக விளக்குகிறார். இதனாலன்றோ அது பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. இதனாலன்றோ அது உலகத்தில் சிறந்த நூல் நிலையங்கள் எவை என்று கருதப்படுகின்றனவோ அவைகளிலெல்லாம் அதற்குத்தனி இடம் தரப்பட்டிருக்கிறது. இதனாலன்றோ அதன் மொழிபெயர்ப்பைப் படித்த காந்தியாரும் அதைத் தாய் மொழியில் படித்தால் அதன் சிறப்பு இதில் காணுவதைவிட அதிகம் காணலாமென்று கூறினார். இவ்வாறு அதன் சிறப்பு அவரிருந்த போதிருந்ததைவிட, இப்போது அதிகமாகி இருப்பது நமக்கு விளங்குகிறது. 'புரட்சிக்கவி திருவள்ளுவர்' சில சமயத்தில் புரட்சி செய்ய ஆரம்பிக்கிறார் உதாரணமாக இரந்து உயிர் வாழும் வாழ்க்கையைப் பற்றி அவர் கூறுவதைப்படிக்கும்போது நமக்குக்கூட புரட்சி எண்ணம்-புரட்சி உணர்ச்சி தோன்றுகிறது. "உலகியற்றியான் பரந்துகெடுக" என்றதைப்படிக்கும்போது அவர் அந்த வாழ்க்கையைப்பற்றி என்ன எண்ணுகிறாரென்பது நமக்குத் தெற்றென விளங்குகிறது இன்று எத்துணைப்பேர் உண்ண உணவின்றி இருக்கிறார்கள்? அவர்களெல்லாம் நாட்டில் பிறந்ததன் நோக்கம் உணவுக்கிரந்து உயிர் விடுவதா? அவ்வாறு அறிவுடைய எவராவது கூறுவரா? கூற அஞ்சுவர் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இன்று திருவள்ளுவர் உயிரோடு இருந்தால் அவர்களுக் காகப் புரட்சி செய்து அவர்கள் வாழ்க்கைக்குப் புத்துயிர் அளித்திருப்பார் என்று எண்ணுவதில் என்ன தவறு! இவ்வாறு அவர் சிற்சில கருத்துக்களைக் கூறும்போது புரட்சியுடன் கூறுவதைப் பார்க்கிறோம். இன்று கூட-விஞ்ஞான வளர்ச்சி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் இந்தக்காலத்தில்கூட மக்களிடம் எத்துணை மூடநம்பிக்கை காணப்படுகிறது வள்ளுவர் மூடநம்பிக்கைகளையெல்லாம் அடியோ டொழித்துவிட வேண்டுமென்று கருதுகிறார். அது அவர் கூறுகின்ற கருத்தால் நமக்கு விளங்குகிறது, "பெருமைக்கு மேனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்ற குறளை நோக்குங்கள்.

ஒரு மனிதன் தான் வாழ்க்கையில் வெற்றி பெறவில்லை என்று வைத்துக் கொள்வோம். அவன் தனக்குள் சொல்லிக்கொள்கிறான். அவன் தனக்குள் எண்ணுகிறான், "நாம் வந்த வழி இது, நம் தலை விதி இவ்வாறு இருக்கிறது" என்று. இவ்வாறு பேசுவது அறிவுடைமையா என்று சிந்தித்துப் பாருங்கள். தலை விதி என்பது எது? அது எங்கே உள்ளது? இவ்வினாக்களுக்கு விடையிறுத்தலரிது. தலை விதி உண்டு என்பர் சிலர். இல்லை என்பர் பலர். அது இல்லையானால் சிலர் மிகவும் முன்னேற்றத்துடன் பெருமையாய் வாழ்வதற்கும் சிலர் அவ்வாறு வாழாததற்கும் காரண

மென்ன? என்றால் சூழ்நிலை, திறமை, அறிவாற்றல், செயலாற்றும் திறன்முதலிய காரணமெனலாம். வள்ளுவரும் அதைத்தான் கூறுகிறார், தத்தம் கருமமே கட்டளைக்கல் என்று. வள்ளுவர் மூடநம்பிக்கைகளை விரும்பவில்லை என்பது நமக்கு விளங்குகிறது.

சிலர், வாழ்க்கையில் முயற்சி செய்யாமலேயே தங்கள் வாழ்க்கையைச் செவ்வனே கழிப்பதில்லை. முயற்சிசெய்து வாழ்க்கையை நடத்த முயன்றால் புகழுடன் வையத்துள் வாழ்வாங்கு வாழலாம். முயற்சி சிறிதும் செய்யாது ஏதாவது செயலாற்ற வேண்டுமென்றால் அது நம்மால்முடியுமா? முடியாது என்று எண்ணுகின்றனர். உயர்ந்த எண்ணங்களை எண்ணுவதினாலேயே எண்ணுவதோடுமட்டும் அதை நிறுத்துவது, முயற்சிசெய்து பார்க்கலாம் முடிந்தால் முடியட்டும் என்று நினைப்பதில்லை. அவர்களைப் பார்த்து வள்ளுவர் கூறுகிறார், முயற்சியாலாகாத தொன்றுமில்லை, முயற்சி செய்தால் எச்செயலையும் நாம் விரைவில் முடித்துவிடமுடியும். ஆகையால் முயற்சி செய்யுங்கள். உலகத்தைப்படைத்த தெய்வத்தால்கூட சில சமயத்தில் சில காரியம் முடியாமற்போவதுண்டு, ஆனால் முயற்சியால் முடியாமற் போவதொன்றுமில்லை. "தெய்வத்தானாகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்" ஆகையால் மனிதர்களெல்லோரும செயலாற்றி வெற்றிபெறவிரும்பினால் முயற்சி செய்ய வேண்டுமென்பதாம். முயற்சி ஏதும் செய்யாமல் நம்மால் முடியாது முடியாது என்று எண்ணுதல் தவறு. "அரியவொன்றாகாத இல்லை பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின்" என்றகுறளையும் இவண்நினைவுறுத்தல் நலம். இவ்வாறு வள்ளுவர், செயலாற்றும் திறனை நனிசிறப்புடன் விளக்குகிறார். இவ்வாறு திருக்குறளின் மேன்மையை ஒவ்வொரு குறளாக எடுத்துக் கொண்டு விளக்க ஆரம்பித்தால் அதற்கு அளவேஇருக்காது. ஆகவே நூலைப்பற்றிப் பொதுவாகவே பார்ப்போம். அரசியல் அமைச்சியல், அன்பு, ஒழுக்கம் முதலிய தலைப்புக்களில் அவர் கூறுகின்ற செய்திகள் நம்மை வியப்புறச் செய்கின்றன. அத்துணை அழகு பொருந்திய முறையில் அவர் அவைகளை விளக்கிக் கூறுகிறார். இதன் சிறப்பை உணர்ந்தோர் பலரும் "பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ நூலெல்லாம் வள்ளுவர் செய்நூலாமோ" என்றும் "இதன்பால் எல்லாப் பொருளுமுள இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்றும் கூறினர். மனிதன் வாழ்க்கைக்கு வேண்டிய—இன்றியமையாத அத்தனைப் பொருள்களையும் வள்ளுவர் தம் நூலின்கண் கூறியிருக்கிறார்.

புகழுடன் வாழப் பிறந்தவன் மனிதன். அவன் வள்ளுவத்தைக் கற்றால் வாழ்க்கைஒளியுடன் திகழும் என்பதில் சந்தேகமில்லை. தனிமனிதனோ அல்லது அரசியலிலுள்ள மனிதனோ தன் வாழ்க்கையைச் செம்மைப்பட நடத்த விரும்பினால திருக்குறளைச் சார்தலே சாலுமென்பதாம். வாழ்க்கையில் ஒழுக்கம் நிறைந்திருக்கவேண்டுமென்றும் ஒழுக்கம் தான் உயிரைவிடச் சிறந்தது என்றும் அவர் கருதுகிறார் - வலியுறுத்துகிறார். "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினுமோம்பப்படும்" என்று ஒழுக்கம் உயிரைவிடச் சிறந்தது என்பதைக் கூறாமல் கூறுகிறார். இவ்வாறு திருக்குறளின் மேன்மை-திருக்குறளின் சிறப்பு நமக்கு ஒவ்வொரு திருக்குறளிலும் விளங்குகிறது. அப் பழம் எந்தப்பக்கம் எடுத்துண்டாலும் இனிப்பு என்பது போல், திருக்குறளெல்லாமே இனிக்கிறது - இனித்தது இனிக்கும் என்பதில் எவருக்கும் ஐயம் இருக்கமுடியாது. திருக்குறளில் வள்ளுவர், சமுதாயத்தைப்பற்றி விரித்துக் கூறுகிறார். சமுதாயம் நல்ல முறையில் அமைந்தால், அதை ஆளும் ஆட்சியும் நல்ல முறையில் அமைய முடியும். மக்கள்தாம் அரசரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அங்கே எவரை அனுப்பவேண்டும் என்பதை அவர்களே உணரவேண்டும். "இதனை இதனால் இவன் முடிக்குமென்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற முறையில் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும் என்கிறார். சமுதாயத்திலுள்ள மக்கள் அறிவுடைய மக்களாக இருக்கவேண்டும். எப்பொருளை யார் யார் வாய்கேட்பினும் அப்பொருளில் உண்மைப் பொருளைக் காண்கின்ற அறிவு அவர்களிடம் இருக்கவேண்டும். உலகத்தோடு பொருந்த ஒழுகுகின்ற அறிவு அவர்களிடம் இருக்கவேண்டும். அவ்வாறு சமுதாயத்திலுள்ள மக்கள் அறிவுடையோராக இருந்தால் அதை ஆளும் அரசும் சிறந்த முறையில் இருக்குமென்பதில் ஐயமில்லை. ஆகவேதான் திருவள்ளுவர் "அறிவுடையாரெல்லா முடையார் அறிவிலா ரென்னுடைய ரேனுமிலர்" என்று கூறுகின்றார். மக்களின் முன்னேற்றத்தை விரும்பி அதற்கேற்ற வழிகளையும் கூறுகிறார்.

சமுதாயம் ஒன்றுபட்டு வாழவேண்டும். அவர்களுக்குள் எந்தப் பிளவும் இருக்கக் கூடாது. சமுதாயத்தில் யாவரும் சமம். ஆண்டி, அடிமை, ஏழை, பணக்காரன், உயர்ந்

நொண்டிமாடு

(டாக்டர், மு. வரதராசனார்)

நொண்டிமாடு மந்தையோடு போய் மேய்வது அந்த மந்தைக்கும் இடையூறு; நொண்டி மாட்டுக்கும் இடையூறு. மேய்ப்பவன் அதன் மேல் கொஞ்சம் கருத்தாக இருந்தால் ஒரு சிறு நன்மையும் ஏற்படலாம்; மேய்ப்பவனும் அதைப் பொருட்படுத்தாமல் விட்டால், மந்தையின் நிலையைவிட அந்த மாட்டின் நிலை மிக இரங்கத்தக்கதாகும்.

இந்திய அரசாங்கத்தில் ஒரு பகுதியாக உள்ள தமிழ்நாட்டின் நிலை நொண்டி மாட்டின் நிலையாகவே இருக்கிறது.

வடகோடி

இந்திய அரசாங்கத்தின் தலைமை வடகோடியில் டில்லி நகரத்தில் உள்ளது. விஞ்ஞான வளர்ச்சியால் வேகமான போக்கு வரவு கருவிகள் ஏற்பட்ட பிறகு, இவ்வாறு வடகோடியும் தென்கோடியுமாக இருப்பதால் இடர்ப்பாடு ஒன்றும் இல்லை எனலாம். தொலைவுயென்ற இந்த ஒரு காரணம்மட்டும் இருந்தால் இது உண்மையே ஆகும். ஆனால் வேறு சில குறைகளும் உடன் சேரும்போது, தொலைவில் இருத்தல் குறைகளுக்குத் துணை செய்வதுபோல் ஆகிறது.

கேரளநாடும் தென் கோடிதான்; தமிழநாட்டைவிடச் சிறிது தென் கோடி என்றும் கூறலாம். ஆனால் நொண்டிமாட்டின் நிலை அதற்கு இல்லை. கேரளநாட்டு மக்கள் இந்திய அரசாங்கத்திலும் வெளியிலும் மிக நல்ல நிலைகளில் இருந்துகொண்டு செல்வாக்கு உடையவர்களாய்த் தம் நாட்டைக் காத்துக்கொள்கின்றனர்.

கேரளத்தாராகிய மலையாளிகள், உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ ஒருவரை ஒருவர் காண நேரும்போது உறவினரைக் காண்பது போல் உள்ளம் மகிழ்ந்து உறவாடுகிறார்கள். ஆனால், தமிழர் ஒருவரை ஒருவர் காணும் போது எப்படியோ பொறாமை நோக்கு ஏற்பட்டு விடுகிறது. ஒரே கட்சியைச்சார்ந்த தமிழர்களுக்குள்ளேயே இப்படிப் பொறாமை வாழ்கிறது என்றால், எதிர்க்கட்சியாரைப் பார்க்கும் போது எப்படி அன்போடு பழக முடியும்? மலையாளிகளுக்குள் வேறு வேறு கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், ஒரே இனம் என்ற பற்றும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வது கடமை என்ற உணர்ச்சியும் இருக்கின்றன. ஆனால் தமிழர்களுக்குள் இந்த நிலைமை பெரும்பாலுமில்லை. ஒரு தமிழன் வாழ்வைக் கெடுப்பவன் பெரும்பாலும் இன்னொரு தமிழனாகவே இருக்கிறான். அயலான் குறுக்கிட்டுத் தமிழனைக் கெடுக்கும்போதும் தன்கையால் அவன் கண்ணைக் குத்தாமல் இன்னொரு தமிழனுடைய கையைக்கொண்டே குத்துகிறான். தமிழன் இன்னொரு தமிழனைப் பார்த்ததும், முடியுமானால் ஆங்கிலத்தில் பேசவே முற்படுகிறான். தமிழ் நாட்டிற்குள்ளேயே இந்த நிலைமை காணப்படுகிறது. ஆனால் ஒரு மலையாளி மற்றொரு மலையாளியை லண்டன் மாநகரத்திலோ நியூயார்க்நகரத்திலோ கண்டாலும் உடனே மலையாள மொழியே அவர்களின் வாயில் வருகிறது. இந்த அளவிற்குத் தமிழருக்குத் தாழ்வு மனப்பான்மை இருக்கிறது; மலையாளிகளுக்குத் தன்மதிப்பு (சுயமரியாதை) இருக்கிறது. தமிழ்நாடு நொண்டி மாடாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

விதிவிலக்கு இல்லாமற் போகவில்லை. தமிழர்களுக்குள் நல்லவர்கள், நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் உடையவர்களில் சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் தொகை போதாது. ஒரு நாட்டைக்காக்கும் அளவிற்கு அந்தத்தொகை பெருகவில்லை. மற்றமொழி

தவன், தாழ்ந்தவன் என்கின்ற பாகுபாடுகள் காணப்படலாகாது. "எல்லோருமோரினம் எல்லோருமோர்குலம்" என்ற பாரதியாரின் கனவை இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்னதாகவே எடுத்துக்காட்டியிருக்கிறார். அத்தகைய சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதே திருவள்ளுவரின் நோக்கம். அவர், சமுதாயத்தைப்பற்றி விளக்கிக் கூறுவதைப் பார்க்குமிடத்து, சமுதாயத்திலேயேபுரட்சியை உண்டுபண்ணுகிறார் என்றே கூறலாம். சமுதாயப் புரட்சி ஏற்பட்டால்தான் சமுதாயமும் அரசியலும் சிறப்புடன் விளங்கும்.

யாருள் அப்படிப்பட்டவர்களின் தொகையே பெருகியுள்ளது.

மொழிவாரி மாகாணம்

நொண்டிமாடு என்பதை விளக்குவதற்கு இன்னொன்றை எடுத்துக் காட்டாகப் பார்ப்போம். மொழிவாரி மாகாணம் வேண்டும் என்று ஆந்திரர்கள் கிளர்ச்சி செய்தார்கள். அவ்வாறு பிரிப்பது நாட்டு ஒற்றுமைக்குக் கேடு என்று மத்திய அரசாங்கம் தடை செய்து வற்புறுத்தியது. ஆந்திரநாடு நொண்டிமாடாக இருக்கவில்லை. அன்புமுறை (அஹிம்சையான வேண்டுகோள்) பலிக்காதது கண்டு, வன்பு முறையைக் கையாண்டது. கட்சிவேறுபாடு முதலியவைகளை அப்போதைக்கு மறந்து பாடுபடுவது கடமை என்று உணர்ந்து, அனைவரும் ஒன்று பட்டார்கள்; போராடினார்கள். ஆந்திரப் பத்திரிகைகளும் கடமையுணர்ச்சியோடு கிளர்ச்சி செய்தன. கூடாது என்று தடுத்த மத்திய அரசாங்கமே வந்து திறப்புவிழா நடத்தும்படியாகச் செய்துவிட்டார்கள்; ஆந்திர மாகாணம் அமைத்துக்கொண்டார்கள். தமிழ் நாட்டார் அவ்வாறு பொதுவேலைக்கும் ஒன்றுபடுவதில்லை; தமிழ் நாட்டுப் பெரிய பத்திரிகைகள் மத்திய அரசாங்கத்தின் விளம்பரக்கருவிகளாக இருக்கின்றனவே தவிர, தமிழ் மக்களின் உள்ளத்தை எடுத்துக் காட்டுவனவாக இல்லை.

தமிழர்கள் ஒரு கிளர்ச்சிக்கும் வழி இன்றி அமைதியாக இருந்துவிட்டார்கள். நொண்டிமாடு என்பதை விளக்குவதற்கு இதுவும் ஒரு சான்று ஆகும்.

தமிழர் பலர், அமைச்சர் உள்பட இந்த மாறுதல் ஏற்படவேண்டும் என்று உள்ளத்தில் விரும்புகிறார்கள. ஆனால் வெளியே சொல்வதற்குத் தயங்குகிறார்கள். மத்திய அரசாங்கத்திடம் ஏதோ ஒரு பயம் இருந்து வருகிறது. ஜனநாயகம், மக்களாட்சி என்றால் இப்படி ஒருவரிடமோ ஒரு சிலரிடமோ பயம் இருக்கக் கூடாது. சர்வாதிகாரத்தில்தான் இப்படி நியாயமான கோரிக்கைகளை எடுத்துச் சொல்வதற்குப் பயப்படுவது வழக்கம. ஆனால் மக்களாட்சியில் இப்படி பயம் இருந்து வருவதால்தான் நொண்டிமாட்டுநிலை காணப்படுகிறது.

ஆந்திரர்க்கு இவ்வகையான பயம் இல்லை. ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆந்திரமாகாணத்திற்கு இன்னது இன்னது செய்யப்படவேண்டும். இன்ன இன்ன குறை உள்ளன என்று ஆந்திர மாகாணத்தில் பொறுப்பில் உள்ளவர்கள் பேசுகிறார்கள். எதிர்க்கட்சியார் பேசுவது ஒருபுறம் இருக்கட்டும்; ஆந்திர மாகாணத்து அமைச்சர்களே பேசுகிறார்கள். அவர்களின் குரல் ஒன்றுபட்ட பலம் பொருந்தியதாக இருப்பதால் மத்திய அரசாங்கத்தின் கருவியாகிய வானொலியும் அவர்களின் பேச்சின் கருத்தை எடுத்துரைக்கின்றது; எல்லா மாகாணங்களும் கேட்கும்படியாக ஆங்கில வானொலிப் பகுதியில் எடுத்துரைக்கின்றது. ஒற்றுமையுடையவர்களின் பலமான குரல், ஆகையால் அதைப் புறக்கணிக்க முடிவதில்லை. தமிழ் நாட்டில் இத்தகையகுரல் எழுவதில்லை. பத்திரிகைகள் இவ்வாறு தொண்டுசெய்வதும் இல்லை. "காக்கை வெள்ளையா? ஆமாம் மத்திய அரசே! காக்கை அப்பட்ட வெள்ளைதான்" என்று பின் பாட்டுப்பாடி விளம்பரம் செய்யும் பத்திரிகைகளே தமிழ் நாட்டில் செல்வாக்கோடு உள்ளன. காரணம் தமிழ் நாடு நொண்டிமாட்டு நிலையில் உள்ளது.

வாய்வளம்

தமிழ்நாட்டில் இரண்டு மூன்று மாவட்டங்கள் தவிர, மற்றவை நீர்வளம் அற்றவை; மூளை வளம், வாய்வளம் தவிர மற்ற வளங்கள் பொதுவாகவே குறைவு. அதனால் வேலையில்லாத்திண்டாட்டம் அளவுகடந்து பெருகிவருகிறது. இந்த நிலையில் ஐந்தாண்டுத் திட்டங்களில் கொஞ்சம் கூடுதலான பங்கு கேட்க உரிமை இருக்கிறது என்பதைத் தமிழ்நாடு உணரவில்லை. வடநாட்டில் இந்தத் திட்டங்களின் பயனாக வேலையில்லாத்திண்டாட்டம் பெரும்பாலும் ஒழித்துவிட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டு நிலை நேர் மாறாக உள்ளது. இதை எடுத்துப் பேசுபவரும் இல்லை; நியாயமான வேண்டுகோள்விடுப்பவரும் இல்லை. எப்படியோ மாடு மந்தையில் இருக்கிறது! மேய்கிறதா இல்லையா என்று யாரும் கவலைப் படவில்லை.

வியாபாரிகள் தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள். வடநாட்டார் இட்டதுதான் சட்டம் தமிழ்நாட்டு வியாபாரம் புறக்கணிக்கப்படுகிறது என்று பேசிக்கொள்ளுகிறார்கள். ஒருவகை ஏகாதிபத்தியமே நடைபெறுகிறது. தலைவர் நேரு எல்லாவற்றையும் தாமே கவனிக்க முடியுமா, மற்றவர்களுக்கு அவரைப்போன்ற பெருந்தன்மை இருப்பதாகக் கூறமுடியவில்லை. நம் நாடு புறக் கணிக்கப் படுகிறது என்று பேசிக்கொள்ளுகிறார்கள்.

பெடரல் செர்விஸ் கமிசன் உத்தியோகங்களை அந்தந்த மாகாணத்தார் மாகாணப் பற்றோடு பெற்று வாழ்கிறார்கள் என்றும், தமிழ்நாட்டார், தம் போலிப்பெருந் தன்மையால் கோட்டைவிடுகிறார்கள் என்றும் பட்டதாரிகள் பேசிக்கொள்கிறார்கள். சிபாரிசும் செல்வாக்கும் வேண்டியவாறு செய்கின்றன என்றும், திறமையும் தகு

தியும் மதிக்கப்படுவதில்லை என்றும் பேசிக்கொள்கிறார்கள்.

எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் மாகாண அரசாங்கம் செய்யக்கூடியது இல்லை என்றும் மத்திய அரசாங்கத்தின் விருப்பமே நிறைவேறக்கூடிய என்றும் மாகாண அரசாங்கம் உரிமை குறைந்த நகரமன்றம் (முனிசிபாலிடி) போல் ஆய்விட்டது என்றும் மக்கள் பேசிக்கொண்டுவருகிறார்கள். மாகாணப் பற்றும் மொழிப் பற்றும் இல்லாமல் மத்திய அரசாங்கத்தைக் காக்கை பிடிக்க வல்லவர்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் (தேர்தலில் தோற்றாலும்) கிடைப்பதை மக்கள் பார்த்துவருகிறார்கள். அதனால் அறிவாளிகளின் அறிவு தம் மாகாணத்திற்குத் துரோகம் செய்தாவது மத்திய அரசாங்கத்தைக் காக்கை பிடிப்பதில் முனைந்துவருவதாயும் உணருகிறார்கள். மத்திய அரசாங்கத்தைக் காக்கை பிடிக்கும் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், கலைக்கழகங்கள், மற்ற நிலையங்கள் இவற்றிற்கு மானியம் கிடைப்பதையும் மற்றவைகள் மொழிப்பற்று, மாகாணப்பற்றுடன் கிடந்து வாடுவதையும் காண்கிறார்கள்.

நிலைமை இது. இதை மாற்றுவது, திருத்த முயல்வது கடமையாக உள்ளது. உண்மையான குறைகள் இருந்தால் அவற்றைப் போக்கவேண்டும். பொய்யான பேச்சுக்களாக இருந்தால் புள்ளிவிவரங்கள் எல்லாவற்றிற்கும் தந்து பொய் பொய்யெனக்காட்டி, மக்களுக்கு அறிவூட்டுவது நல்லது. இவ்வாறு செய்யாமல் குறைகளைப் போக்காமல் நொண்டி மாடாகவே நாட்டை விட்டிருந்தால் நல்லெண்ணம் குறையும். படை வல்லமையைக் காப்பதை விட மக்களின் நல்லெண்ணத்தைக் காப்பதே முதல் கடமை; மக்களாட்சிக்கு அதுவே இன்றியமையாத கடமை. காக்கைபிடிக்கும் மாந்தரையும் பின் பாட்டுப் பாடும் பத்திரிகைகளையும் நம்பாமல், போற்றாமல், ஒதுக்க வேண்டும்; அவர்களிடமிருந்து நாட்டைக் காக்கவேண்டும்; நாட்டு மக்களின் உரிமையையே பெரிதாகப் போற்றி அனைவர்க்கும் ஒத்த முன்னேற்றம் அளித்தல் வேண்டும்.

—"தமிழ்நாடு"

"மன்றம்" பொங்கல் மலர்

1957

சென்ற ஆண்டினும் சிறந்த முறையில்
மலர் மணம் தரும்.

கலைஞர்கள் - அறிஞர்கள் - கவிஞர்கள்
பலரின்
கட்டுரைகள் - கதைகள் - கவிதைகள்
இடம்பெற்று
அறிவுக் குவியலாக மலர் திகழும்.
மூவண்ண முகப்புடன் முத்தமிழ்ச் சுவையுடன் மலர் மிளிரும்.
100 பக்கங்கள்
விலை ரூபாய் ஒன்றுதான்.

கள்ளமில்லா வெள்ளையுள்ளம்

நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது 1943-ஆம் ஆண்டில், தில்லைநகரை அடுத்த சிற்றூரில் நடைபெற்ற நீத்தார் நினைவுநாள் கூட்டம் ஒன்றில கலந்துகொள்ள, அவ்வூர் நண்பர்கள் என்னை அழைத்துச் சென்றார்கள்.

நான் கூட்டம் நடைபெற்ற இடத்தை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தபோது, கூட்டம் தொடங்கப்பெற்று ஒருவர் பேசிக்கொண்டிருந்தார். அவருடைய குரல் பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்களின் குரல்போன்ற சாயல் உடையதாகவும், அவருடைய பேச்சு தோழர் அழகிரிசாமி அவர்களுடையதைப் போன்று கேலி கிண்டல் விரவியதாகவும் காணப்பட்டன. "அழகிரிசாமியின் வாரிசு" போலிருக்கிறது என்று வியப்புணர்ச்சியுடன் எண்ணிக்கொண்டு விழாக் கூட்டத்திடையே சென்று அமர்ந்தேன். எடுப்பான தோற்றமும், நிமிர்ந்த போக்கும், மிடுக்கான அசைவுகளும்கொண்ட ஒருவர் நின்று பேசிக்கொண்டிருப்பதைக்கண்டேன். "பேசிக்கொண்டிருப்பவர் யார்?" என்று என் அருகில் அமர்ந்திருந்த நண்பர் ஒருவரைக் கேட்டேன். "இவர்தான் காஞ்சிகலியாணசுந்தரம்!" என்றார் அந்த நண்பர் கேள்விப்பட்டிருந்த ஒருவரை நேரில் காணவும், கண்டு அளவளாவவும் அன்று வாய்ப்பு ஏற்பட்டது கண்டு மகிழ்ச்சியுற்றேன்.

மிக நீண்டநாட்களாகத் தொடர்ந்து இயக்கப்பணி ஆற்றிவருகிற ஒருசில முக்கியமானவர்களிலே தோழர் காஞ்சி கலியாணசுந்தரம் அவர்களும் ஒருவராவார். அறிஞர் அண்ணா அவர்கள் அரசியல் உலகில் பங்கு கொள்ளாது கல்லூரிமாணவராக இருக்கும்போதே, தோழர் கலியாணசுந்தரம் அவர்கள், காஞ்சிமாநகரில் பகுத்தறிவு இயககப்பணிகளையும், நீதிக்கட்சிப் பணிகளையும் மிகத் தீவிரமாகச் செய்துவந்தவராவார். காஞ்சிபுரத்தில் இயக்கம் வளர்வதற்கு ஆரம்பக் காலத்தில் அடிப்படை கோலியவர் தோழர் காஞ்சியார் என்றால் அது மிகையாகாது. கோயில்களும், வைதீகர்களும் மிகுதியாகவுடைய காஞ்சிபுரத்தில், ஆரம்பநாட்களில் இயக்கத்தை வளர்ப்பது என்பது அவ்வளவு எளிதான செயலல்ல. வைதீகம் வழங்கிய கல்லடி, சொல்லடி, வல்லடி ஆகியவைகளையெல்லாம் தன்னந்தனியாக இருந்து தாங்கி, அவைகளை எதிர்த்து நின்று, இயக்கத்தை மெல்லமெல்ல ஆனால் உறுதியாக வளர்த்துவிட்டவர் அவர்தான்.

தோழர்கலியாணசுந்தரம் அவர்கள் பேச்சிலும், எழுத்திலும் வல்லவர். நடிப்பதிலும் ஆர்வங்கொண்டவர். எதற்கும் அஞ்சாமை, மனதில்பட்டதை அப்படியே வெளியிடும் தன்மை, மனதிற்குப் பிடிக்காதவர்களை அவர்கள் யாராயிருந்தாலும் சரி வெளிப்படையாகப் புறக்கணிக்கும் தன்மை, நண்பர்களிடத்தில் குழந்தைபோல் பழகுதல், மிக நெருங்கிய நண்பர்களிடத்தில் மிக்க அன்புரிமை பாராட்டுதல் போன்ற பண்புகள் அவரிடம் சிறக்கக்காணப்பெறும். அவர் அரசியல்-பொருளாதார-சமுதாயப் பிரச்சினைகள் பற்றிய நுணுக்கங்களைத் தெளிவாக அறிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றவர். அவர் உள்ளங்கவர்ந்த தத்துவப்பேராசியர்களிலே காலஞ்சென்ற தோழர் எம். என். ராய் அவர்கள் முக்கியமான ஒருவராவார். தோழர் கலியாணசுந்தரம் அவர்களுக்கு யாராவது ஒருவரிடத்தில் மிக்க அன்பும்-மிக்க மதிப்பும்-மிக்க மரியாதையும் உண்டு என்றால், அவர்தான் அறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள்.

தோழர் காஞ்சியார் அவர்களுக்கு நீண்டகாலமாகவே பத்திரிகைத்தொழிலில் மிகவும் ஈடுபாடுடையவர். அவர் 'குமரரவிகடன்', 'விநோதன்', 'ஊழியன்', 'எதிரொலி', 'தேசோபகாரி', 'தொழிலாளிமித்திரன்', 'திராவிடநாடு', 'மாலைமணி', 'போர்வாள்' ஆகிய இதழ்களில் பணியாற்றிவந்தார். இப்பொழுது அவரது பணியை 'நம்நாடு' பெற்றுவருகிறது.

அவர் அறிஞர்அண்ணா அவர்களோடு சேர்ந்து 'சந்திரோதயம்', 'சந்திரமோகன்', நீதிதேவன் மயக்கம்' ஆகிய நாடகங்களில் சிறுசிறு உறுப்புக்கள் ஏற்று நடித்துமிருக்கிறார்.

அவருடைய பேச்சு அழுத்தந்திருத்தமாகவும், கேலியும் கிண்டலும் நிறைந்து நகைச்சுவை மிக்கதாகவும் இருக்கும். அவருடைய பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் புனலின் தன்மையைவிட அனலின் தன்மையே மிகுந்து காணப்படும்.

தோழர் காஞ்சி கலியாணசுந்தரம் அவர்களின் சொற்கள் சிலபோது கடுமையானவையாக இருந்தாலும், அவரது உள்ளம் கள்ளமில்லா வெள்ளையுள்ளம் என்பது அறியத்தக்கதாகும்!

—இரா. நெ.

வெளிவந்துவிட்டது !

ஆசிரியர் :

இரா. செழியன், எம். ஏ.,

மூன்று சிறு நாடகங்களின் தொகுப்பு

"போராட்டம்"

விலை ரூ. 2-4-0

கிடைக்குமிடம் ;

பாரி நிலையம்

59, பிராட்வே :: சென்னை - 1.

தமிழ்நாட்டில் தலைசிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் — ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)
ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிட்டப்பட்டு வெளியிடப்படுகி